www.facebook.com/ebooksintamil

NETRA PUBLICATIONS

# தோஷமும் பரிகாரமும்

## ஓர் எளிய தீர்வு

WRITTEN BY

A. KA

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil




தோஷமும் பரிகாரமும்

நூல்     தோஷமும் பரிகாரமும்

உபதலைப்பு. .ஓர் எளிய தீர்வு

ஆசிரியர்.

..   A..கண்ணன்.M.Com.Bed BL.I.S

வெளியீடு.........நேத்ரா பப்ளிகேஷன்ஸ்

பக்கம்.   .....  .. 127

நாள்.        .......  பிப்..2019

வலை தளம் ....sivappadai.blogspot.com

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil

இமெயில்...... . Kanna773@yahoo.com

## அன்பு வாசகர்களே!

எப்படிப்பட்ட தோஷங்களையும் நீக்கும் பரிகாரம் ஒன்று உண்டு. அதன்படி நவக்கிரகங்களில் எந்தெந்த கிரக தோஷத்திற்கு எப்படிப்பட்ட எளிய பரிகாரத்தைச் செய்யலாம் என்றும் . பில்லி சூனியம்.சார்ந்த அதர்வண மாந்திரிகங்களினால் ஏற்படும் தீமைகளை எவ்வாறு விரட்டியடிக்கலாம் என்றும் பித்ருக்கள் சாபம் , பிராணிகள் சாபம், எப்படி போக்குவது என்றும் புரிந்து கொண்டு.உங்கள் வாழ்வை வளமாக்குவதே இப்புத்தகத்தின் நோக்கம்.����������������

## முன்னுரை

நவக்கிரக சுழற்சியைக் கொண்டே, ஒரு மனிதனின் வாழ்க்கை நிர்ணயிக்கப்படுவதாக ஜோதிட நூல்களும், புராணங்களும் தெரிவிக்கின்றன. அதனால் தான் நவக்கிரக வழிபாடு என்பது நம்மிடையே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருக்கிறது. எப்படிப்பட்ட தோஷங்களையும் நீக்கும் பரிகாரம் ஒன்று உண்டு. அதனை நம் முன்னோர்கள் சொல்லி வைத்துச் சென்றுள்ளனர். சிலர் விலங்குகளுக்கு உண்ணும் பொருட்களை வழங்குவதால் சில தோஷங்கள் விலகும் என்று சொல்லி வைத்துள்ளனர். அதன்படி நவக்கிரகங்களில் எந்தெந்த கிரக தோஷத்திற்கு எப்படிப்பட்ட எளிய பரிகாரத்தைச்செய்யலாம்என்பதைப் பார்ப்போம்.

## ஜோதிட ரீதியாக நவகிரஹ தோஷ பரிகாரம்

வானியல் மற்றும் ஜோதிட சாத்திரத்தில் சிகரம் தொட்ட நமது நாட்டின் முன்னோர்கள் ஒரு மனிதன் விண்ணில் இருக்கும் ஒன்பது கோள்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு தான் இருக்கிறன்

www.facebook.com/ebooksintamil

என்கிற உண்மையை கண்டறிந்தனர். இந்த ஒன்பது கிரகங்களால் மனிதர்களுக்கு தோஷம் ஏற்படுவதை கண்டறிந்து அதற்கு நவகிரக தோஷம் என்று பெயரிட்டனர். இந்த நவகிரகங்களில் ஒவ்வொரு கிரகத்தால் ஏற்படும் தோஷத்திற்கு பரிகாரங்கள் கூறப்பட்டுள்ளன

## சூரிய தோஷ பரிகாரம்



உலகிற்கு ஒளியாய் இருப்பவர் “சூரிய பகவான்” ஆவார். சூரியனின் ஒளி மற்றும் வெப்பம் பூமியில் அனைத்து உயிர்களும் வாழ்வதற்கு இன்றியமையாத காரணமாக இருப்பது நவீன விஞ்ஞானிகளின் முடிவாகும். ஆனால் பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பு ஜோதிட சாத்திரத்தின் மூலம் ஒரு மனிதனுக்கு அவனது ஜாதகத்தில் சூரியனின் நிலை கெடுவதால் என்னென்ன பாதிப்புகள் ஏற்படும் என்பதோடு, அதை போக்குவதற்கான பரிகாரங்களையும் கூறியிருக்கின்றனர். அவற்றை குறித்து இங்கு விரிவாக காணலாம்.

ஒரு நபரின் ஜாதகத்தில் சூரியனின் நிலை கெட்டிருந்தாலும், பாதகமான சூரிய திசை நடப்பதாலும் சூரிய தோஷம் ஏற்படுகிறது. மேலும் தங்கள் தந்தையை அவரின் வயதான காலத்தில் சரியாக பராமரிக்காதவர்களும் சூரிய தோஷம் ஏற்படும். சூரிய தோஷம் ஏற்பட்ட நபர்களுக்கு உடல் அடிக்கடி

நோய்வாய்ப்படும். கண், இதயம் சம்பந்தமான பாதிப்புகள் ஏற்படும். கம்பீரம் இருக்காது. தங்களின் தகுதிக்கு கீழான வேலைகள், பணிகளை செய்யும் நிலை ஏற்படும். பணியிலிருப்பவர்களுக்கு பதவி உயர்வு பெறுவதில் தடை மற்றும் தாமதங்கள் உண்டாகும்.

## பரிகாரம்

சூரிய தோஷம் நீங்கி சூரியனின் நற்பலன்களை பெறுவதற்கான மாதம் ஒரு ஞாயிறு கிழமை தினத்தில் ஒரு வேளை உணவை தவிர்த்து விரதம் இருந்து, சூரிய பகவானுக்குரிய மந்திரங்களை துதித்து வழிபட வேண்டும். ஞாயிற்றுக்கிழமை அன்று கோவிலுக்கு சென்று சிவபெருமானையும், நவகிரகங்களில் சூரிய தேவரையும் வணங்கி அந்த கோவிலிலோ அல்லது கோவிலுக்கு அருகிலோ அரச மரம் இருந்தால், அந்த அரச மரத்திற்கு உங்கள் கைகளால் நீரூற்றி வருவது உங்களுக்கு நன்மைகளை ஏற்படுத்தும்.

"ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி" சூரியன் வம்சத்தில் பிறந்தவர். தினந்தோறும் ஸ்ரீ ராமரை பிரார்த்தித்து வந்தால் சூரிய தோஷம் நீங்கும். ஒரு தேய்பிறை ஞாயிற்றுக்கிழமையன்று ஒரு செம்பு நாணயத்தை உங்கள் தலையை மூன்று முறை சுற்றி, ஓடும் ஆற்றில் வீசு வேண்டும். உங்கள் கைகள் மற்றும் விரல்களில் செம்பு வளையம் அல்லது செம்பு மோதிரத்தை எப்போதும் அணிந்திருப்பது நல்லது. கருப்பு நிற பசு மாட்டிற்கு ஞாயிற்று கிழமையில் உணவளிப்பதும் உங்களின் சூரிய தோஷத்தை போக்கும் சிறந்த பரிகார முறையாகும்.

ஜோதிடம் மற்றும் விஞ்ஞான ரீதியாக பார்த்தால், எலும்புகளின் வலிமைக்கு சூரியனின் ஒளிகிரணங்கள் உதவும். அப்படியா சமயத்தில் அச்சூரிய பகவானை போற்றி வழிபட வேண்டிய மந்திரம் இது. இந்த மந்திரத்தை கூறுவதால் எலும்பு பிரச்சனை நீங்கும் அதோடு சூரியனின் அருளால் அரசாங்கத்தில் உயர் பதவி கிடைக்கும், சமூகத்தில் அந்தஸ்து உயரும்.

மந்திரம் :

www.facebook.com/ebooksintamil

"ஓம் அஸ்வ த்வஜாய வித்மஹே
பாச ஹஸ்தாய தீமஹி
தப்போ சூர்ய ப்ரசோதயாத்

பொதுவான பொருள்:

"குதிரையின் கொடியை அடையாளமாக கொண்டவரும், அதன் பாசத்தையும் கையில் பிடித்திருப்பவரான சூரிய பகவானை நான் வாங்குகிறேன் என் குறைகளை அவர் நீக்கட்டும்" என்பது இம்மந்திரத்தின் பொதுவான பொருளாகும்.

இம்மந்திரத்தை எலும்பு சம்பந்தமான குறைபாடுகளால் பாதிக்கப்பட்டவர்கள், ஒரு ஞாயிற்று கிழமை அதிகாலை சூரியன் உதிப்பதற்கு முன்பாக எழுந்து, குளித்து முடித்து, சூரிய ஒளி உங்கள் உடல் மீது படும் வகையில் நின்று இம்மந்திரத்தை 108 முறை ஜெபிக்க வேண்டும். இதை 48 நாட்கள் தொடர்ந்து செய்து வரவேண்டும். மேலும் ஞாயிற்று கிழமைகளில் கோவிலுள்ள சூரிய பகவானின் சந்நிதிக்கு சென்று, நல்லெண்ணெய் விளக்கேற்றி, இம்மந்திரத்தை 108 முறை கூறி வழிபட எலும்பு சம்பந்தமான குறைபாடுகள் நீங்கும். அரசாங்கத்தில் உயர் பதவி கிடைக்கும்.

நவகிரக தோசப் பரிகார ஸ்தலங்கள்

ஒருவருடைய ஜாதகத்தில் சூரியன் நீச்சம் பெற்று இருந்தாலும் சூரியன் தசை, சூரிய புத்தி நடைபெற்றாலும்,சூரியனுக்குப் பரிகாரம் செய்து கொள்ள வேண்டும். தமிழகத்தில் சூரியனுக்கு மூன்று கோயில்கள் உள்ளன. திருக்கண்டியூர் வீரட்டம் (தஞ்சைக்கு அருகிலும்), திருப்புறவார் பனங்காட்டூர் (விழுப்புரத்திற்கு அருகிலும்), சூரியனார் கோவில் ஆகியனவே அவை.

������������������������������

**2.** சந்திரன் தோசமம் பரிகாரமும்

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil





ஒன்பது கோள்களில் சந்திரன் ஒரு மனிதனின் மனதிற்கு காரகனாகிறார் என கூறப்பட்டுள்ளது. ஜாதகத்தில் இந்த சந்திரனின் நிலை சரியில்லாத போதோ கோட்சார ரீதியாகவோ கெட்டிருக்கும் போது சந்திர தோஷம் ஏற்படுகிறது. இந்த சந்திர தோஷத்தை போக்குவதற்கான பரிகாரங்களை இங்கு தெரிந்து கொள்ளலாம்.

சந்திர பகவான் ஒரு ஜாதகரின் தாய், ஜாதகரின் மனநிலை, ஞாபகத்திறன், வெளிநாட்டு பயணம், திரவம் சம்பந்தமான தொழில்கள் போன்றவற்றிற்கு காரகனாக இருக்கிறார். ஜாதகத்தில் ஒருவருக்கு சந்திரனின் நிலை கெட்டிருந்தால் அவருக்கு மனநிலை கோளாறுகள், தாயுடன் மனஸ்தாபம், நீரில்கண்டம்,வெளிநாட்டு பயணத்தடை போன்றவை ஏற்படும்.

## பரிகாரம்

ஜாதகத்தில் சந்திரன் நிலை சரியில்லாத நிலையில் இருப்பவர்கள், சந்திரனின் கோட்ச்சாரம் சரியில்லாமல் இருப்பவர்கள் ஒரு திங்கட்கிழமை அன்று ஏதேனும் ஒரு புண்ணிய நதியில் ஒரு சொம்பு தூய்மையான பசும்பாலை ஊற்றி வழிபட வேண்டும். சந்திர கிரகத்தால் தோஷம் அடைந்தவர்கள் திங்கட்கிழமைதோறும் அதிகாலையில் எழுந்து, குளித்து முடித்துவிட்டு, ஐந்து விளக்குகளில் நெய் ஊற்றி, தீபமேற்ற வேண்டும். பின்பு சிவபெருமானையும் சந்திர பகவானை அவருக்குரிய மந்திரங்களை கூறி வணங்க வேண்டும்.

www.facebook.com/ebooksintamil

சந்திரன் மாத்ருகாரகன், அதாவது ஒரு மனிதனின் தாய்க்கு காரகனாகிறார். எனவே தனது தாயாரை வாழ்நாள் முழுவதும் நன்கு கவனித்து வருபவர்களுக்கும், தாயாரிடம் ஆசி பெறுபவர்களுக்கும் சந்திர தோஷங்களால் எவ்வித பாதிப்புகளும் ஏற்படாது.

சிவன்கோவில்களில் சிவனுக்கு பாலாபிஷேகத்திற்கு பசும் பாலும், பௌர்ணமி தினங்களில் கோவில்களில் நடைபெறும் அன்னதானத்திற்கு அரிசியையும் தானம் வழங்குவது போன்ற செயல்களால் நாம் சந்திரனின் நல்லாசிகளை பெற முடியும் அதோடு தாயின் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

சந்திரனின் தோஷம் விலகி சந்திர பகவானால் முழுமையான நற்பலன்களை பெற ராசிக்கல்லையும் அணியலாம். வெள்ளியில் முத்து அல்லது சந்திரகாந்த கல் பதித்த மோதிரத்தை வலது கையின் மோதிர விரலில் எப்போதும் இருக்குமாறு அணிந்து கொள்வதால் சந்திரனால் நல்ல பலன் கிடைக்கும்.

சந்திர காயத்ரி

சந்திர திசை மற்றும் சந்திர புத்தி நடைபெறும் போது இந்த காயத்ரி மந்திரம் சொல்லி வரும் போது சந்திர பகவானால் ஏற்படும் தீங்கு விலகி நன்மை உண்டாகும். (குறைந்தது **36, 54** முறை சொல்லி வரவும்) சந்திர பகவான் அதிபதி மஹாவிஷ்ணுவை தொடர்ந்து வழிபட்டு வரவும். சந்திர க்ஷேத்திரம் திங்களூர், திருப்பதி கோவில், மற்றும் காஞ்சிபுரம் காமாட்சி, சென்று வழிபட்டு வரவும். இது சிறந்த பரிகாரம் ஆகும்.

சந்திர காயத்ரி -அழகு, தாய், மூளை வளர்ச்சி, உணர்சிகள், கற்பனை திறனுக்கு சந்திரனே அதிபதி

ஓம் பத்மத்வஜாய வித்மஹே
ஹேம ரூபாய தீமஹி
தன்னோ சந்திரஹ் ப்ரசோதயாத்.
அல்லது

சந்திரன் தொடர்பான பிரச்சனைகள் மற்றும் சந்திர தசை அல்லது சந்திர அந்தர் தசையின் போது:

சந்திரனின் கடவுளான கௌரியைத் தினமும் வழிபடவேண்டும்.

www.facebook.com/ebooksintamil

தினசரி அன்னப்பூர்ணா சோஸ்திரம் படிக்க வேண்டும்.

சூரிய மூல மந்திர ஜபம்:

"ஓம் ஸ்ரம் ஸ் ரீம் ஸ்ரௌம் ஷக் சந்திராய நமஹ",

40 நாட்களில் 10000 முறை சொல்ல வேண்டும்.

சந்திர ஸ்தோத்திரம் படிக்க வேண்டும்.

ததி சங்க துஷாராபம்
ஷீரோதார்ணவஸம்பவம்!
நமாமி சசினம் ஸோமம்
சம்போர் மகுடபூஷணம்!!

தமிழில்,

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி!, திருவருள் தருவாய்
சந்திரா போற்றி!, சத்குரு போற்றி!
சங்கடந் தீர்ப்பாய் சதுர போற்றி!

7000 முறை சொல்ல வேண்டும்.

தொண்டு: திங்களன்று நன்கொடையாக மாட்டுப்பால் அல்லது அரிசி கொடுக்க வேண்டும்.

நான்கு நாள்: திங்கள்.

பூஜை: தேவி பூஜை.

ருத்ராட்சம்: 2 முக ருத்ராட்சம் அணிய வேண்டும்.

சந்திர காயத்ரி மந்திரம்2

பத்மத்வஜாய வித்மஹே ஹேமரூபாயதீமஹி|

www.facebook.com/ebooksintamil

தந்நோ ஸோம: ப்ரசோதயாத்||

சந்திர தசையின்போது வால்மீகி ராமாயணத்தில் சுந்தர காண்டத்தின், 5 வது அத்தியாயம் தினமும் படிக்க வேண்டும்.

## திருத்தலம்

இங்கே சந்திர பகவான் தனிச்சந்நிதியில் கோலோச்சுகிறார். நவக்கிரக தலங்களில் இது சந்திர பகவானுக்கு உரிய கோயில்.

நவக்கிரக தலங்களில், இதுதான் தஞ்சாவூருக்கு அருகில் உள்ள ஆலயம். தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறுக்கு அருகில் உள்ள திங்களூர் தலத்தில் உள்ள சிவனாரின் திருநாமம் & ஸ்ரீகயிலாசநாதர். எனவே அந்தக் கயிலாய நாதரான சிவபெருமானே இங்கு வந்து நம் குறைகளை நிவர்த்தி செய்வதாகச் சொல்வர்.

இங்கே தனிச்சந்நிதியில் இருந்தபடி அருள்பாலிக்கிறார் சந்திர பகவான். மனக்கிலேசம், மனதில் குழப்பம், தேவையற்ற பயம், எப்போதும் தெளிவற்ற நிலை என சிக்கி வருந்துவோர் இங்கே... திங்களூர் திருத்தலத்துக்கு வந்து தரிசித்தால் சகலமும் நிவர்த்தியாகும்; சந்தோஷம் கூடும்; மனதில் தெளிவு பிறக்கும் என்பது ஐதீகம்!

பொதுவாகவே, திங்கட்கிழமைகளில் இங்கு சிறப்பு அபிஷேகமும் அர்ச்சனைகளும் நடைபெறுவது வழக்கம். கார்த்திகை மாத சோம வாரம் சிறப்பானவை என்கிறது ஸ்தல புராணம். எனவே கார்த்திகை சோம வார நன்னாளில், அதாவது கார்த்திகை மாதத்தின் திங்கட்கிழமையின், திங்களூர் வாருங்கள்; நல்லதொரு திருப்பத்தைக் காண்பீர்கள்!

சந்திர தோஷம் உள்ளவர்கள், இழந்த பதவி அல்லது செல்வத்தைப் பெற விரும்புவோர், மாலையில் பிரதோஷ பூஜையில் கலந்து கொண்டு, சிவனாரையும் சந்திர பகவானையும் தரிசிப்பது நற்பலன்களை வாரி வழங்கும்! சந்திர ஹோரையின் போது தரிசனம் செய்வது கூடுதல் பலன்களை அள்ளித் தரும்

����������������������������

www.facebook.com/ebooksintamil

## சவ்வாய் /அங்காரகண்



தோசம்

ராசி - மேஷம், விருச்சிகம்
திசை - தெற்கு
அதிதேவதை நிலமகள்,சுப்ரமணியர்

பிரத்யதி தேவதை ஷேத்திரபாலகர்
தலம் - வைத்தீஸ்வரன் கோவில்
இனம் - ஆண்
நிறம் - சிவப்பு
வாகனம் - ஆட்டுக்கிடா
தானியம் - துவரை
மலர் - செண்பகம், சிவப்பு அலரி
வஸ்திரம் - சிவப்பு ஆடை
ரத்தினம் - பவழம்
நிவேதனம் - துவரம் பருப்புப்பொடி அன்னம் (காரம்)
சுவை - துவர்ப்பு
சமித்து - கருங்காலி
உலோகம் - செம்பு
பயன் - தைரியம், பேச்சாற்றல், வழக்குகளில் வெற்றி.
மனைவி - சக்தி தேவி

இலவச தமிழ் மின்னூல்கள் eBooks

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil

புத்திரர் - கரேசன்

செவ்வாய் தோசம் என்றால் "

( நம்பிக்கை உள்ளவர்களுக்கு மட்டும் )

இந்த செவ்வாய் தோஷம் என்பது வெறும் தோஷமே ஆகும்.இதற்காக பயப்பட தேவையில்லை.இது ஆயுளை கெடுப்பது கிடையாது.

சில சோதிடர்கள் செவ்வாய் களத்திரத்தின் ஆயுளை கெடுக்கும் என பயமுறுத்தியதன் விளைவாக பல பெண்களுக்கும்/ஆண்களுக்கும் திருமணம் என்பது நடைபெறுவது கால தாமதமாகி பலர் முதிர்கன்னிகளாகவே இருக்கிறார்கள்.

செவ்வாய் தோஷம் என்பது ஒருவரது சாதகத்தில் லக்கனத்திற்கோ அல்லது ராசிக்கோ அல்லது சுக்கிரனுக்கோ 2,4,7,8,மற்றும் 12 ம் இடங்களில் செவ்வாய் இருப்பின் செவ்வாய் தோஷமே ஆகும்.

இதில் என்னைப்பொறுத்தவரை இரண்டாமிடம் ,ஏழாமிடம் மற்றும் எட்டாமிடம் இந்த ஸ்தானங்களில் செவ்வாய் அமர்வது நல்லதல்ல ஏனெனில் இவை யாவும் திருமணவாழ்வு சிறக்க உகந்த இடமாதலால் இதுபோன்ற இடங்களில் பாவியாய செவ்வாய் பகவான் அமர்தல் கடுமையான செவ்வாய் தோஷத்தை உண்டுபண்ணும் என்பது என் அனுபவ உண்மையாகும்.

இதுபோன்ற செவ்வாய் தோஷம் உள்ள ஒருவருக்கு செவ்வாய் தோஷம் உள்ள ஒருவரைதான் ஜோடியாக இணைக்கவேண்டும் .இதற்கான காரணத்தை அலசி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

செவ்வாய் தோஷத்தை பொறுத்தவரை மூன்று வகையாக அவை தரும் பாதிப்பின் அடிப்படையில் பிரிக்கலாம்.அவையாவன:-

1)உடல் நலத்தை பாதிக்கும் செவ்வாய் தோஷம்.

2)தாம்பத்ய உறவை பாதிக்கும் செவ்வாய் தோஷம்

3)உயிரைக்கெடுக்கும் செவ்வாய் தோஷம்

என பிரித்து பார்க்கலாம்.

1)உடல் நலத்தை பாதிக்கும் செவ்வாய் தோஷம்:
-

செவ்வாய் என்பது நமது உடலில் உள்ள இரத்தத்தை குறிப்பதாகும்.நமது இரத்தத்தில் ஆண்டிஜென் ,ஆண்டிபாடி எனும் இரு பகுதிகளின் கலவையாகும்.இங்கு ஆண்டிஜென் நுண்கிருமி ஆகும்.இது உடலுக்கு நல்லதல்ல. உலகிலே ஆண்டிஜென் இல்லாத ஒரே பொருள் தாயின் பால்

www.facebook.com/ebooksintamil

ஆகும்.எனவே தாய் பாலை அருந்திய குழந்தைகள் வலுவான நோய் எதிர்ப்பு சக்தியுடையவர்களாக உள்ளார்கள்.மற்றொன்று ஆண்டிபாடி ஆகும்.ஆண்டிபாடி என்றாலே "எதிர்ப்பு சக்தி" என்று பொருள்.இது இரத்தத்தில் மிகுதியாக இருப்பது நல்லது.உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை தரும்.

இதை ஏன் இவ்வளவு தூரம் ஒரு அறிவியல் ஆசிரியாக விளக்கினேன் ஏன் எனில் செவ்வாய் தோஷம் உள்ளவர்களது இரத்தத்தில் இந்த ஆண்டிஜென் எனும் நுண்கிருமி அதிகமாக இருக்கும்.இந்த கிருமிகளை எதிர்க்கும் சக்தியான ஆண்டிபாடியும் அவர்களது இரத்தத்தில் அதிகப்படியாக இருப்பதால் அது அவர்களை பாதிக்காது.ஆனால் அதே நேரத்தில் செவ்வாய் தோஷம் இல்லாதவர்களை மணக்கும்போது இந்த நுண்கிருமிகள் செவ்வாய் தோஷமில்லாதவர் உடலில் நுழைந்து நாளுக்குநாள் உடல் மெலிந்து நோயாளியாவர்.

ஆண் ஜாதகத்தில் இரண்டு மற்றும் பணிரெண்டாமிடத்தில் செவ்வாய்பகவான் இருந்து அவருடன் ராகு அல்லது கேது பகவான் இணைந்திருந்தால் (இது மனைவி ஸ்தானத்திற்கு ஆறாமிடம் மற்றும் எட்டாமிடம் ஆக வரும்) இதனால் அவனுக்கு வரும் மனைவிக்கு செவ்வாய் தோஷம் இல்லாமிருந்தால் அவளுக்கு திருமணத்திற்கு பிறகு மாதாவிலக்கு கோளாறுகள்,கர்ப்பபையில் கட்டிகள்,அதிகமான உதிரப்போக்கு,அடிக்கடி கருச்சிதைவு மற்றும் இரத்தசோகை போன்ற நோய் உண்டாகலாம்.இதனால் உடல் நலம் பாதிக்கப்படலாம்.இது செவ்வாய் திசையினிலோ அல்லது செவ்வாயுடன் சேர்ந்த ராகு,கேது திசைகளில் மேற்படியான பலன்கள் நடைபெற வாய்ப்பு உண்டு.

இதேபோல பெண் ஜாதகத்தில் இரண்டாமிடத்திலோ அல்லது பணிரெண்டாமிடத்திலோ செவ்வாய் இருந்து அவருடன் ராகு மற்றும் கேதுபகவான் இணைந்திருந்தால் அவளுக்கு வரும் கணவனுக்கு செவ்வாய் தோஷம் இல்லையென்றால் இரத்தத்தில் கிருமிகளின் தாக்குதல்,விரை வீக்கம் ஏற்படுதல் மற்றும் அறுவை சிகிச்சை பாதிப்புகள் செவ்வாய் திசையிலோ அல்லது ராகு/கேது திசைகளில் தரலாம்.

2)தாம்பத்ய சுக்த்தை பாதிக்கும் செவ்வாய் தோஷம்;-

பொதுவாக செவ்வாய் தோஷம் உள்ளவர்களுக்கு உடல் வெப்பம் அதிகமா இருக்கும்.காம உணர்வு மிகுதியாக இருக்கும்.இரத்தத்தின் தன்மை அதிக வீரியத்துடன்

இருக்கும்.உயிர் திரவம்(விந்து/அண்ட அணுக்கள்) கெட்டித்து இருக்கும்.தாம்பத்ய உறுப்புகள் வலிமை மிக்கதாக இருக்கும்.தாம்பத்ய உறவில் தீவிரமான ஈடுபாட்டில் இருப்பார்கள்.பாலுணர்வு தொடர்பான உரையாடலை அதிகமாக விரும்புவுவார்கள்..இவர்கள் இரத்தத்தில் ஆண்டிஜென் மிகுந்திருக்கும்.

செவ்வாய் தோஷம் இல்லாதவர்கள் உடல் எப்பொழுதும் குளிர்ச்சியாக இருக்கும்.காம உணர்வு சராசரியாக இருக்கும்.இவர்கள் எதிலும் நிதானமாக செயல்படுவார்கள்.தங்களின் எதிர்பாலினத்தாரை அனுசரித்து நடந்து கொள்வார்கள்.தாம்பத்ய உறவுக்கு அதிகம் முக்கியத்துவம் தரமாட்டார்கள்.பாலுணர்வு தொடர்பான உரையாடலை விரும்பி பேசமாட்டார்கள்.இவர்களது இரத்தத்தில் ஆண்டிஜென் அதிகம் இருக்காது.

எனவேதான் செவ்வாய் தோஷம் உள்ளவர்களுக்கு செவ்வாய் தோஷம் உள்ள மற்ற நபரை இணைக்கவேண்டும்.இவ்வாறு செவ்வாய் தோஷம் உள்ளவரை இத்தோஷம் இல்லாதவரோடு இணைக்கும்போது அவர்களது காம உணர்வுக்குஇத்தோஷமில்லாதவர்கள் ஈடுகொடுக்க இயலாததால் அவர்கள் வேலி தாண்டிய வெள்ளாடு ஆக மாறும் நிலைக்கு வந்து விடுகிறார்கள்.

ஆண்/பெண் ஜாதகத்தில் செவ்வாய் நான்கு,ஏழு,எட்டு மற்றும் பணிரெண்டாமிடத்தில் இருந்து அவருடன் பாதிக்கப்பட்ட சுக்கிரன் (நீசம்,அஸ்தங்க மற்றும் வக்கிர) இணைந்து சுபர் பார்வை பெறாவிடில்

இவர்களை செவ்வாய் தோஷமில்லாதவரோடு இணைக்கும்போது அவனோ /அவளோ காம மிகுதியால் அதாவது உடல் உறவில் திருப்தியில்லாமல் பல மலரில் தேன் எடுக்கும் வண்டாவாள் அல்லது தனியாக பிரிந்து வாழும் சூழ்நிலையை உருவாக்கும்.இது செவ்வாய் அல்லது சுக்கிரதிசையில் நடக்கலாம்.

3)உயிரை கெடுக்கும் செவ்வாய் தோஷம்:-

கால புருஷ லக்கனத்திற்கு பாதகாதிபதியான சனி பகவான் தனக்கு சத்ருவான செவ்வாய் பகவனோடு இரண்டு,நான்கு,ஏழு ,எட்டு மற்றும் பணிரெண்டாமிடத்தில் அமர்ந்து அவனுக்கோ/ அவளுக்கோ வரும் ஜோடிக்கு செவ்வாய் தோஷம் இல்லாமல் இருந்து விவாகம் செய்தால் செவ்வாய் திசை சனிபுத்தியிலோ

www.facebook.com/ebooksintamil

அல்லது சனி திசை செவ்வாய் புத்தியிலோ தன் துணையை இழக்கும் வாய்ப்பு உருவாகும்.

செவ்வாய் தோஷம் உள்ளவர்களுக்கு லக்கனத்திற்கு இரண்டு மற்றும் ஏழாம் அதிபதி வலுக்குறைந்த நிலையில் செவ்வாய் தோஷம் இல்லாதவரோடு இணைக்கும்போது இந்த செவ்வாய்தோஷமே தாரதோஷமாக மாறி தோஷம் இல்லாதவரின் உயிரை பறித்து விடும்.அதேநேரத்தில்( 2,7 ஆம் அதிபதி ) வலுவான நிலையில் தோஷமில்லாதவருக்கு திருமணம் செய்யும்போது உடல் நலக்குறைவும்,தாம்பத்ய குறைபாடும் உருவாகலாம்.

## பரிகாரம்

சுபமான பரிகாரங்களை வளர்பிறைகளிலும் துயரம் துக்கம், நீக்கும் பரிகாரங்களை தேய் பட்சத்திலும் செய்ய வேண்டும். குளத்தங்கரை, கிணற்றங்கரை, நதிக்கரை கடற்கரை, அருவிகரை, கோசாலை, சிவ ஆலயங்கள், விஷ்ணு சந்நிதி, குரு ஆலயம் ஆகிய இடங்களில் சுப பரிகாரங்களை செய்யலாம்.

செவ்வாய் இருக்கும் இடத்தின் அதிபதி என்ன கிழமை குறிக்கிறதோ அந்த கிழமையில் பரிகாரம் செய்யலாம். அவரவர் பிறந்த நட்சத்திரத்தன்றும் பரிகாரம் செய்யலாம். செவ்வாய் கிழமையிலும் பரிகாரம் செய்யலாம்.

ஜென்ம நட்சத்திரத்துக்கு 4, 8, 12 ஆக வரும் நட்சத்திர நாட்களில் பரிகாரங்கள் செய்யக்கூடாது. திருமணத்திற்கு பிறகு பரிகாரம் செய்து கொள்பவரின் மனைவியின் நட்சத்திரத்திலிருந்து 4, 8, 12 ஆக வரும் நாட்களிலும் பரிகாரம் செய்யக் கூடாது. இவர்களின் முதல் குழந்தை ஆணாக இருந்தால் அந்தக் குழந்தையின் 4, 8, 12 நட்சத்திரங்களில் வரும் நாட்களிலும் பரிகாரங்கள் செய்து கொள்ளக் கூடாது.

www.facebook.com/ebooksintamil

இதை பின்பற்றினால் பரிகாரம் நல்ல பலனளிக்கும்.

பரிகார தலம்

வைத்தீஸ்வரன் கோவில்;

ஜாதகத்தில் செவ்வாய் பாதிப்பு, திருமணத்தடை, தொழில்

வழித் தடம்;

மயிலாடுதுறையிலிருந்து 14 கி.மீ. தூரத்தில் உள்ளது

பழநி- திருவாவின்குடி;

செவ்வாய்க்கிழமை மதியம் உச்சிகால பூஜையில் முருகனுக்குப் பால் அபிசேகம் செய்து வழிபட தோசம்

வழித் தடம்;

திண்டுக்கல்லிருந்து சுமார் 60 கி.மீ. தூரத்திலுள்ள பழனியில் அடிவாரத்திலுள்ள கோ

புதன்



காரகன் - மாமன்

தேவதை - விஷ்ணு (பெருமாள்)

தானியம் - பச்சைப் பயறு
உலோகம் - பித்தளை
நிறம் - பச்சை
குணம் - தாமஸம்
சுபாவம் - சவுமியர்
சுவை - உவர்ப்பு
திக்கு - வடகிழக்கு

உடல் அங்கம் - கழுத்து
தாது - தோல்
நோய் - வாதம்
பஞ்சபூதம் - நிலம்
பார்வை நிலை - தான் நின்ற ராசியில் இருந்து 7-ம் இடத்தை முழு பார்வை. 3, 10-ம் இடம் கால் பங்கும், 5,9-ம் இடம் அரை பங்கும், 4,8-ம் இடத்தை முக்கால் பங்கும் பார்ப்பார்கள்

பாலினம் - ஆணும், பெண்ணும் இல்லாத நிலை
உபகிரகம் - அர்த்தபிரகாணன்
ஆட்சி ராசி - மிதுனம், கன்னி
உச்சராசி - கன்னி
மூலத்திரிகோண ராசி - கன்னி

நட்பு ராசி - ரிஷபம், சிம்மம், துலாம்
சமமான ராசி - மேஷம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம்
பகை ராசி - கடகம்
நீச்ச ராசி - மீனம்
திசை ஆண்டுகள் - பதினேழு ஆண்டுகள் ஒரு ராசியில்

சஞ்சரிக்கும் காலம் - ஒரு மாதம்
நட்பு கிரகங்கள் - சூரியன், சுக்ரன்
சமமான கிரகங்கள் - செவ்வாய், குரு, சனி, ராகு-கேது
பகையான கிரகம் - சந்திரன்
அதிக பகையான கிரகம்- சந்திரன்

www.facebook.com/ebooksintamil

இதர பெயர்கள் - பாகன், கொம்பன், மால், மாலவன், கணக்கன், பண்டிதன், அருணன், சவுமியன்
நட்சத்திரங்கள் - ஆயில்யம், கேட்டை, ரேவதி

நவக்கிரகங்களில் நான்காவதாக இடம் பெற்றிருப்பவர், புதன். பொன் அகப்பட்டாலும், புதன் அகப்படாது என்ற பெருமைக்குரியவர். மற்ற கிரகங்களின் சஞ்சாரம் சரியில்லாத போதுகூட, புதன் அதைச் சரிசெய்து நமக்கு அருள் செய்வார்.

கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கவும், எடுத்த காரியம் தடையில்லாமல், திறமையாக செய்துமுடிக்க இந்த ஸ்லோகத்தை சொல்லலாம்.

புதன் மந்திரம்

ப்ரிங்கு கலிகா ச்யாம்
ருபேணா ப்ரதிமம் புதம்
ஸௌம்யம் ஸௌம்ய குணோபேதம்
தம் புதம் ப்ரணமாம் யஹம்

புதன் காயத்ரி

ஓம் கஜத்துவ ஜாய வித்மஹே
சுக ஹஸ்தாய தீமஹி
தன்னோ புத: பிரசோதயாத்

இந்த பாடலை பாடி புதன் அருளை பெறலாம். புதன் கிழமை அன்று நாராயணை வழிபட்டு பின்னர் நவக்கிரங்களை வணங்கி, பின் புத பகவான் முன் நின்று வழிபட வேண்டும். இப்படி செய்தால் சகல சிறப்புகளையும் அடையலாம்.

பூஜையறையில் 5 அகல் தீபம் ஏற்றி, இஷ்ட தெய்வத்தை வணங்க, பெருமாளை வழிபடவும். புதன்கிழமை பச்சை பயறு வேக வைத்து பசு மாட்டுக்கு கொடுக்கலாம்.

மனநோய், நரம்புத் தளர்ச்சி, ஆண்மைக்குறைவு ஆகிய நோய்களுக்கு

www.facebook.com/ebooksintamil

புதனே காரணமாக இருப்பதால் மேற்கண்ட நோயால் பாதிக்கப்பட்டவர் அவசியம் திருவெண்காடு வந்து, புதன் பகவானுக்கு பரிகார பூஜை செய்து ஆக வேண்டும்.

புத பகவானுக்கு புதன் கிழமையில் புதன் பகவானுக்கு அபிஷேகம் செய்வித்துப் பச்சை வஸ்திரம், மரகதமணி, வெண்தாமரை இவற்றால் அலங்காரம் செய்து, புதனைப் பற்றிய ஸ்தோத்திரங்களை ஓதி, நாயுருவி சமித்தால் யாகத் தீ எழுப்பவும். பருப்புப் பொடி அன்னத்தை ஆகுதி செய்து, தீபாராதனை செய்து, அர்ச்சனை செய்யவும். தூபதீப நைவேத்தியம் கொடுத்துப் பிரார்த்தனை செய்து கொள்ளவும். கற்பூர ஆரத்தி எடுக்கவும்.

புத பகவானை வழிபடும்போது ராகம் தெரிந்தவர்கள் நாட்டக் குறச்சி ராகத்தில் கீர்த்தனைகளைப் பாடுவது மிகுந்த சிறப்பாகும்.

அரிசி மாவினால் புதனுக்குரிய இந்தக் கோலத்தை புதன்கிழமை தோறும் பூஜை அறையில் போடவும். விளக்கேற்றி வைத்து புதனுக்குரிய பாடல்களை, தியான சுலோகங்களைச் சொல்லி வழிபடவும்.

மனநோய், சோகை, புற்றுநோய், வாதநோய், நரம்புத் தளர்ச்சி, வெண்குட்டம், ஆண்மைக்குறைவு, சீதள நோய் ஆகிய நோய்களுக்கு புதனே காரணமாக இருப்பதால் மேற்கண்ட நோயால் பாதிக்கப்பட்டவர் அவசியம் திருவெண்காடு வந்து, புதன் பகவானுக்கு பரிகார பூஜை செய்து ஆக வேண்டும்.

### ஸ்தலம்

புதன் – திருவெண்காடு , மதுரை மீனாட்சி அம்மன் கோவில் .

## வியாழன் குரு தோஷம்

www.facebook.com/ebooksintamil



நவகிரகங்களில் பூரண சுப கிரகம் என்று போற்றப்படுபவர் குரு பகவான். உயர்கல்வி, மழலை பாக்கியம் அனைத்துக்கும் காரகத்துவம் வகிப்பவர். இவர் இருக்கும் இடத்தை விட, பார்க்கும் இடம் அதிக நன்மைகளைத் தரும். ஒருவருடைய ஜாதகத்தில் இவர் வலிமை பெற்றவராக இருக்கும்போது, அவருக்கு சகல நன்மைகளும் நடைபெறும். இவர் ஜாதகத்தில் இருக்கும் ஸ்தானத்தைப் பொறுத்து அவருக்கு ஏற்படக்கூடிய நன்மைகளையும், குரு வலுக்குன்றியோ அல்லது தோஷம் பெற்றிருந்தாலோ இருந்தால் செய்யவேண்டிய பரிகாரங்கள் குறித்தும் விளக்குகிறார் ஜோதிட நிபுணர் ஆதித்ய குருஜி.

"ஜாதகத்தில் இவர் வலிமை பெற்றிருந்தால், ஒரு மனிதனை மிகப் பெரிய கோடீசுவரனாக்குவார். ஒருவருடைய ஜாதகத்தில் இவர் நல்ல அமைப்பில் அமர்ந்து குருவின் தசையும் நடக்குமானால் அவர் அளவுக்கு அதிகமான பணத்தை சம்பாதிப்பார்.

ஜோதிடத்தில் சுப கிரகங்களின் வரிசையில் குரு, சுக்கிரன், வளர்பிறைச் சந்திரன், புதன் ஆகிய நான்கு கிரகங்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறது.அவர்களில் நற்பலன்களைத் தருவதில் முதன்மையானவர்.

தன காரகன், புத்திர காரகன் என்று அழைக்கப்படும் இவரே ஒரு மனிதன் சம்பாதிக்கும் பணத்துக்கும், அவனுடைய குழந்தைகளின் லோனுக்கும் காரணமான கிரகம். ஒரு மனிதன் பிறந்ததன் அடிப்படை நோக்கமான வம்ச விருத்திக்கு

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil

ஆதாரமான கிரகம். இந்த ஓர் அமைப்பால்தான் அவர் அனைத்து நிலைகளிலும் முதல்வராக வைத்துப் பார்க்கப்படுகிறார்.

பணத்துக்கு அதிபதி குருவே... ஒருவர் மிகப் பெரிய பணக்காரர் ஆவது குருவின் அருளால் மட்டுமே நடக்கிறது. ஜாதகத்தில் அதிகமான வலிமை பெற்ற குரு, ஒரு மனிதனை மிகப் பெரிய கோடீசுவரனாக்குவார். ஒருவருடைய ஜாதகத்தில் இவர் மிக நல்ல அமைப்பில் அமர்ந்து இவரின் தசையும் நடக்குமானால், அவர் அளவுக்கு அதிகமான பணத்தைச் சம்பாதிப்பார்.

ஜாதகத்தில் எந்த கிரகம் வலுவிழந்து காணப்பட்டாலும், குரு மட்டும் வலுவிழக்கக் கூடாது என்பது ஒரு மறைமுக விதி. முக்கியமாக எந்த ஒரு யோக ஜாதகத்திலும் லக்னத்தையோ, ராசியையோ, குறைந்த பட்சம் லக்னாதிபதியையோ குரு பார்த்தே தீருவார். அல்லது வலுப்பெற்று இருப்பார்.

செல்வந்தர் யோகம் தரும் அமைப்பில் இருக்கும் குரு, கீழ்க்காணும் வழிகளில் நன்மைகளைச் செய்வார்.

நல்ல நெறி, நன்னடத்தை, கருணை உள்ளம், ஆன்மிக ஈடுபாடு, தூய சிந்தனை, குழந்தைகள், செல்வம், யானை, பருத்த உடல், அன்பு, மஞ்சள், உயிர், எதிர்பார்ப்பில்லா ஆன்மிகம், வங்கி, நீதித்துறை, ஆராய்ச்சி, நிதி அமைப்புகள், பணம் புரளும் இடங்கள், கோயில்கள், அமைச்சர், ஆலோசகர், ஆன்மிக நாட்டம், யோகா, இனிப்புச் சுவை, அரண்மனை,  நகைத்தொழில், நேர்மையா9ன விவாதம், ஆழமான அறிவு, அதிர்ஷ்டம், கோடிக்கணக்கில் பணம், சிவத் தொண்டு, அர்ச்சகர், பூசாரி, குணமுள்ள வாழ்க்கை துணை, பொன் நிறம், தங்கம், அருள்வாக்கு, சாஸ்திரம், சுகபோகம், அதிர்ஷ்டம், மளிகைக் கடை, நவதானியம், கடலை, டிபார்ட்மெண்டல் ஸ்டோர்  ஆகியவற்றை அருளக்கூடியவர் வலிமை பெற்ற குருபகவான்.

குரு பகவான் ஜாதகத்தில் வலிமை இழந்து இருந்தாலோ மேற்கண்ட விஷயங்களில் தலைகீழ் நிலைமைகளை  உருவாக்குவார். ஜாதகத்தில், குரு நீசமாகவோ, பகை பெற்றோ இருந்தால், அத்தகைய ஜாதகர்கள் பரிகாரங்கள் செய்து கொள்வது நல்லது.

அதற்குரிய பரிகாரங்கள்...!

நவகிரகத் தலங்களில் குருவுக்கு முதன்மையான தலமாகத் திகழும் கும்பகோணம் அருகே உள்ள ஆலங்குடிக்குச் சென்று குருவருள் பெறுவது மிகவும் நல்லது.

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil

சென்னையில் இருப்பவர்கள், சேக்கிழார் பெருமானால் ஆயிரம் வருடங்களுக்கு முன் போரூரில் எழுப்பப்பட்ட அருள்மிகு ராமநாதீஸ்வரப் பெருமான் திருக்கோயிலுக்கு வியாழன் தோறும் சென்று வழிபடுவது மேன்மை தரும். இத் திருத்தலத்தை 'வட ஆலங்குடி' என்றே பக்தர்கள் அழைக்கிறார்கள்.

தென் மாவட்டத்தில் உள்ளவர் கள் எம்பெருமான் செந்திலாண்டவனின் அருள்தலமான திருச்செந்தூரில் வழிபடலாம். சென்னை பாடியில் உள்ள திருவல்லீஸ்வரர் ஆலயம், தென்குடித்திட்டை போன்ற தலங்களும் குருவின் அருள் தரும் கோயில்கள்தான்.

ஜாதகத்தில் இவர் வலிமையிழந்திருக்கும் நிலையில், வியாழக்கிழமைகளில் அவருக்கு உரிய மஞ்சள் நிறத்தில் இருக்கும் லட்டுகளை வாங்கி, தட்சிணாமூர்த்திக்கு நைவேத்தியம் செய்து, கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு வழங்குவதும், மங்கலகரமான மஞ்சள் நிறப் பொருள்களைப் பிறருக்கு தானம் கொடுப்பதும் சிறந்த பரிகாரங்களாகும்.

குரு தோஷம் போக்கும் காயத்ரி மந்திரம்

ஜாதகத்தில் குரு பலன் குறைந்தவர்கள் வியாழக்கிழமைகளில் கீழே கொடுக்கப்பட்டுள்ள காயத்ரி மந்திரம் சொல்லி வழிபாடு செய்து வந்தால் நல்ல பலனை காணலாம்.

கும்பகோணம் அருகே உள்ள ஆலங்குடி குரு ஸ்தலமாகும். அங்கு பரிகார பூஜைகள் செய்து வழிபடலாம். நவ திருப்பதிகளில் ஒன்றான ஆழ்வார் திருநகரி குரு ஸ்தலமாகும். அங்கும் வழிபாடு செய்யலாம். திருச்செந்தூரில் முருகப்பெருமான் குரு வடிவாகவே அருள்புரிகிறார். எல்லா சிவன் கோயில்களிலும் தட்சிணாமூர்த்திக்கு வியாழக்கிழமை சிறப்பு வழிபாடுகள் நடத்தி வழிபடலாம்.

‘ஓம் விருஷப த்வஜாய வித்மஹே
க்ரூணி ஹஸ்தாய தசமி
தந்தோ குரு பிரசோதயாத்’

அல்லது

‘ஓம் குரு தேவாய வித்மஹே

www.facebook.com/ebooksintamil

பிரம்மானந்தாய தீமஹி
தந்நோ குரு பிரசோதயாத்’

என்ற குரு காயத்ரி மந்திரத்தை தினமும் 108 முறை சொல்லலாம்.

‘ஓம்பிம் சிவய வசி குரு தேவாய நம’ என்ற மந்திரத்தை தினமும் 108 முறை சொல்லலாம்.

வியாழக்கிழமை விரதம் இருந்து மாலையில் சிவன் கோயிலுக்கு செல்லலாம். அங்கு தட்சிணாமூர்த்திக்கு நடக்கும் சிறப்பு பிராத்தனையில் கலந்துகொண்டு பக்தர்களுக்கும் ஏழைகளுக்கும் கொண்டைக்கடலை சுண்டல் வழங்கலாம

ஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓ

சுக்கிரன் தோஷமும் பரிகாரமும்



ஆட்சி பெறும் ராசி - ரிஷபம், துலாம்
உச்சம் பெறும் ராசி - மீனம்
நீச்சம் பெறும் ராசி - கன்னி

நட்பு பெறும் ராசிகள் - மிதுனம், தனுசு, மகரம்,கும்பம்
பகை பெறும் ராசிகள் - கடகம், சிம்மம்
சொந்த நட்சத்திரம் - பரணி, பூரம், பூராடம்

திசை - கிழக்கு
அதிதேவதை - லட்சுமி
ஜாதி - பிராமணன்
நிறம் - வெள்ளை
வாகனம் - கருடன்
தானியம் - மொச்சை
மலர் - வெந்தாமரை
ஆடை - வெண்பட்டு
இரத்தினம் - வைரம்
செடி / விருட்சம் - அத்தி
உலோகம் - வெள்ளி
இனம் - பெண்
அங்கம் - மர்ம ஸ்தானம்
நட்பு கிரகங்கள் - புதன், சனி, இராகு, கேது
பகை கிரகங்கள் - சூரியன், சந்திரன்
சுவை - இனிப்பு
பஞ்ச பூதம் - அப்பு
சுக்கிரனுக்குரிய கோயில் - கஞ்சனூர்

சுக்கிரன் நீசமடைந்தால் அந்த தோஷத்திற்கு சம்பந்தப்பட்டவரோ அல்லது குடும்பத்தாரோ கீழ்க்கண்ட பரிகாரத்தை செய்துகொள்ளலாம். வெள்ளிக்கிழமைதோறும் அஷ்டலட்சுமியை வழிபாடு செய்துவர வேண்டும். ஆறாவது வெள்ளிக்கிழமையில் ஏழை, எளிய, பெண்களுக்கு துணிமணிகளை தானம் செய்யலாம். அல்லது அவர்களின் திருமணத்திற்கு பண உதவி செய்யலாம். அல்லது ஏழைப்பெண்கள் இருவருக்கு மாங்கல்ய தானம் செய்யலாம். இதனால் சுக்கிரன் நீசத்தன்மை மாறும். (இந்தப் பரிகாரத்தை வசதியுள்ளவர்கள் மட்டுமே செய்துகொள்ள முடியும்.)

வசதி வாய்ப்பில்லாதவர்கள், சுக்கிரன், நீசம்பெற்றிருந்தால் 27 வெள்ளை மொச்சைப்பயிறு எடுத்து வெள்ளைத்துணியில் முடிந்து பூஜை அறையில் வைத்து நல்ல மனைவி அமையவேண்டுமென்று வேண்டிவர சுக்கிரனால் நற்பலன் ஏற்படும். நல்ல மனைவி அமைவார்.

www.facebook.com/ebooksintamil

சுக்கிரன் நீசம்பெற்று, திருமணம் செய்துகொண்டவர்கள் 27 வெள்ளை மொச்சைப் பயிறு எடுத்துக்கொண்டு வெள்ளைத் துணியில் முடிந்து கணவன்- மனைவி தலையணையில் வைத்து (தனித்தனியாக) தைக்க வேண்டும். மேலும் சுக்கிர தசை நடப்பவர்கள் 27 வெள்ளை மொச்சைப் பயிறு எடுத்து வெள்ளைத் துணியில் முடிந்து பூஜையறையில் வைத்து வணங்கி வர, சுக்கிர தசை லாபம் தரும

## பரிகார ஸ்தலம்

தமிழ்நாட்டிலுள்ள நவக்கிரக தலங்களில், கஞ்சனூர் சுக்கிரன்தலமாகjfபோற்றப்படுகிறது.

இறைவன் பெயர்: அக்னீஸ்வரர்

இறைவி பெயர்: கற்பகாம்பாள்

இத்தலத்துக்கு திருநாவுக்கரசர் பதிகம் ஒன்று உள்ளது

## எப்படிப் போவது?

மயிலாடுதுறையில் இருந்து 20 கி.மீ. தொலைவிலும், கும்பகோணத்தில் இருந்து சுமார் 18 கி.மீ. தொலைவிலும் இத்தலம் அமைந்துள்ளது. கும்பகோணம் மற்றும் மயிலாடுதுறையில் இருந்து பேருந்து வசதிகள் உண்டு. ஆடுதுறையிலிருந்து திருமங்கலக்குடி, சூரியனார் கோவில் வழியாக துகிலி செல்லும் சாலையில் சென்று, கோட்டூர் - கஞ்சனூர் என்று வழிகாட்டிப் பலகை உள்ள சாலையில் பிரிந்து இத்தலத்தை அடையலாம்.

## ஆலய முகவரி

அருள்மிகு அக்கினீஸ்வரர் திருக்கோவில்,
கஞ்சனூர்,
கஞ்சனூர் அஞ்சல்,
துகலி வழி,
திருவிடைமருதூர் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம் – 609 804.

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil

இந்த ஆலயம், காலை 7 மணி முதல் 11 மணி வரையும், மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் திறந்திருக்கும்.

மனித வாழ்வில் மனநிறைவோடு வாழ மிகவும் அத்தியாவசியமான கிரகம் சுக்கிரன். இந்தக் கிரகம் ஒருவரின் ஜாதகத்தில் நீசமடைந்து பலம் குன்றி இருந்தாலோ அல்லது சுக்கிரன் இருக்கும் இடத்தைப் பொறுத்து ஆதிபத்ய தோஷம் பெற்று இருந்தாலோ, அவற்றுக்கெல்லாம் பரிகாரத் தலமாக அமைந்துள்ளது திருகஞ்சனூர் என்ற இத்தலம். சுக்கிரனுக்கு வெண் பட்டாடை சாற்றி, வெள்ளைத் தாமரை மலர்களால் அர்ச்சித்து, நெய் தீபம் ஏற்றி வழிபட்டு சுக்கிர தோஷத்தில் இருந்து விடுபடலாம்.

கஞ்சனூர் தலத்தின் சிறப்பு

நவக்கிரகத் தலங்களில், சுக்கிரன் தலமாக கஞ்சனூர் போற்றப்படுகிறது.
பஞ்சாட்சர மகிமையை வெளிப்படுத்திய ஹரதத்த சிவாசாரியார் அவதரித்த தலம்.

63 நாயன்மார்களில் ஒருவரான மானக்கஞ்சாற நாயனார் அவதரித்து வழிபட்ட சிறப்பினை உடைய தலம்.

பிரம்மனுக்கு சிவபெருமான் திருமணக் காட்சி தந்தருளிய தலம்.

அக்கினிக்கு உண்டான சோகை நோயைத் தீர்த்தருளிய தலம்.

பராசரருக்குச் சித்தப்பிரமை நீங்கியதும், சந்திரனின் சாபம் நீங்கியதும் இத்தலத்தில்தான்.

கொடிமரத்தை அடுத்துள்ள கல் நந்தி புல்லைத் தின்ற பெருமையுடைய தலம்

சுக்கிர பகவான் காயத்ரி

ஓம் அச்வத்வஜாய வித்மஹே
தனூர் அஸ்தாய தீமஹி
தன்னோ சுக்ர ப்ரசோதயத்

இந்த மந்திரத்தை தினம்தோறும் கூறுவதன் பயனாக சுக்கிரனால் ஏற்படும் தடைகள் அனைத்தும் நீங்கி

www.facebook.com/ebooksintamil

வாழ்வில் வளம் பெறலாம்

ஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓ

## சனி பகவான் தோஷம்

சனி பகவான் ஸ்தோத்திரப் பிரியர். சனி தோஷம் நீங்க சனிக் கிழமைகள்தோறும் விரதமிருந்து, சனி பகவான் சந்நதியில் இரண்டு அகல் விளக்குகளில் நல்லெண்ணெய் ஊற்றி தீபமிட்டு, அல்லது எள் விளக்கு, எள்ளன்னம் நைவேத்யம் படைத்து, மனமுருக, சனி கவசம்,



சனிஸ்வர அஷ்டோத்ரம் பாராயணம் செய்திடலாம். முடிந்தவரை ஏழைகளுக்கு எள்ளன்னம், கருப்பு வஸ்திரங்களை தட்சணையுடன் தானம் தரலாம்.

இவன் வழிபாட்டை திருநள்ளாறு சென்று நள தீர்த்தத்தில் நீராடி செய்வது மிகச் சிறந்த பலன்களை தரும். திருநள்ளாற்று தர்பாரண்யேஸ்வரரையும், அம்பாளையும், சனி பகவானையும் வழிபடுவது சனி தோஷம் தீர்க்கும்.

www.facebook.com/ebooksintamil

கறந்த பசும் பாலினைக் கொண்டு சிவ பெருமானுக்கு அபிஷேகம் செய்வதும், சனிக் கிழமைகளில் சிவனை வில்வம் கொண்டு அர்ச்சித்து, விளக்கேற்றி வழிபடுவதும் சிறப்பு. பிரதோஷ வழிபாடு மிக நன்று. சிவ புராணம், பஞ்சாட்சரம், சுதர்சன மூல மந்திரம், சுதர்சன அஷ்டகம் போன்றவற்றை பாராயணம் செய்வதும், சிறந்த பலன்களை கொடுக்கும்.

விநாயக பெருமான் வழிபடுவதும், ஆஞ்சனேயரை சனிக் கிழமைகளில் துளசி மாலை அல்லது வடை மாலை அணிவித்து, அர்ச்சித்து 27 முறை வலம் வருவதும் அஷ்டமச் சனி தோஷ நிவர்த்தி தரும்.

காக்கைக்கு தினந்தோறும் அன்னம் இதுவும், உளுந்து தானியத்தை தானம் செய்வதும், கோவில்களில் நவக்கிரகங்களை 9 முறை வலம் வந்து வணங்குவதும், நீலக் கல் அணிந்து மோதிரத்தை அணிந்து கொள்வதும், சனிக் கிழமை அதிகாலை வேளைகளில் சுந்தர காண்டம் பாராயணம் செய்வதும் ஏழரைச் சனியின் தோஷம் குறைக்கும்.

சனி தோஷத்தினால் துன்பங்கள் அதிகமாகும் நேரங்களில், கருப்பு தோல் அகற்றாத முழு உளுந்து தானியத்தை 108 என்ற எண்ணிகையில், இரவு தலையணை அடியில் வைத்து உறங்கி, பின்னர் காலையில் எழுந்து நீராடி, சனி பகவானை 108 முறை வலம் வந்து, ஒவ்வொரு வலம் முடிந்தவுடனும் ஒரு உளுந்தை தரையில் இட வேண்டும். உளுந்து தானியம் தானம் சனி பகானின் நல்லாசி கிடைத்திட அருளும்.

வெப்துனியா செய்திகள் உடனுக்குடன்!!! உங்கள் மொபைலில்... இங்கே க்ளிக் செய்யவும்

மனிதர்கள் வாழ்க்கையில் ஏற்படும் அனைத்து துன்பங்களையும் கண்டறிந்து அவைகளை இன்பமயமான வாழ்க்கையாக மாற்றுவதற்காக சித்தர்களாலும் முனிவர்களாலும் ரிஷிகளாலும் இறைவனின் அருளால் தங்கள் ஞானத்தால் கண்டறிநத தெய்வீக கலைகள்தான் மணி, மந்திரம், அவுஷதம் என்ற முப்பெரும் கலைகள் ஆகும்.

இவை ஜோதிடம்,மந்திரம்,மருத்துவம் எனப்படும் இப்பெரும் கலைகளினால் மனித குலம் இன்று வரை மனம் உடல்

www.facebook.com/ebooksintamil

வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களில் இருந்து விடுபட்டு பெரும் நன்மை அடைந்து வருகின்றது.

மனிதர்களின் வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு துன்பங்களுக்கு நவக்கிரகங்களின்பார்வை (கதிர் வீச்சு) ஒரு காரணம் என ஜோதிட சாஸ்திரம் வலியுறுத்துகிறது.

நவகிரங்கள் எனப்படும் ஒன்பது கிரகங்களில் மூன்று கிரகங்கள் தீய பலன்கள் அளிப்பதில் வலிமை வாய்ந்தவை. அவை ராகு,கேது,சனி ஆகும். இவைகளில் முதன்மையானது சனி என்ற சனீஸ்வர பகவான்தான்.

சனீஸ்வர பகவானின் பிடியிலிருந்து யாரும் தப்ப முடியாது என்பர்.

இறைவனாகிய சிவ பெருமானையே ஒரு கணம் பிடித்ததால்தான் சனி ஈஸ்வரபட்டம் கிடைத்து சனீஸ்வரன் ஆனார்.பனிரென்று ராசிகளில் உள்ள ராசிக்காரர்களுக்கு சுமார் ஏழு ராசிகளின் அமைப்பு உள்ளவர்களுக்கு ஏதாவது ஒரு வகையில் ஏழரை சனி,கண்ட சனி அஷ்டமசனி போன்ற பாதிப்பு இருந்து கொண்டே இருக்கும்.

இதனால் அவர்களுக்கு வாழ்வில் எடுத்த காரியங்களில் தோல்வி, பண முடக்கம், வம்பு, சண்டை, விரக்தி, தொழில் முன்னேற்றமின்மை எதிர் காலமே சூன்யமானது போன்ற இன்னல்களுக்கு ஆட்பட்ட வாழ்க்கையை மிகவும் சிரமமாக அனுபவித்து கொண்டிருப்பார்கள்.

சனீஸ்வர தோஷத்தின் பிடியில் உள்ளவர்கள் பல்வேறு கோவில்களுக்கு சென்று நவகிரங்களுக்கு தீபம் போட்டு அர்ச்சனை அபிஷேகம் செய்தும் சரிவர பலன் காணாமல் மனம் நொந்த நிலையில் இருப்பார்கள். இதற்கு பரிகாரமாக சித்தர்கள் மிக எளிய வழிமுறைகள் வகுத்துள்ளனர்.

### சனி தோஷம் நீங்க பலன் தரும் எளிய பரிகாரங்கள்

1. தினமும் காகத்திற்கு எள் கலந்த சாதம் வைக்கவும்.

2. சனிக்கிழமை தோறும் சனி பகவானுக்கு இரும்பு அகல் விளக்கில் நல்லெண்ணெய் தீபம் ஏற்றிவழிபடவும்.

3. கருங்குவளை மலர்களால் சனி பகவானுக்கு அர்ச்சனை செய்து வரலாம்.

4. வன்னி மர இலைகளை மாலையாக தொடுத்து சிவபெருமானுக்கு, சனிக்கிழமை தோறும் சாத்தி வழிபட்டு வரலாம்.

5. சனிக்கிழமை அசைவ உணவை தவிர்ப்பது நன்மை தரும்.

6. சனிக்கிழமை தோறும் நல்லெண்ணெய் குளியல் செய்தால் தீமைகள் குறையும்.

7. ஆஞ்சநேயருக்கு வடை மாலை அல்லது வெற்றிலை மாலை சாத்தி வழிபடுதல் வேண்டும். அனுமன் வழிபாடு சனி பகவானின் தொல்லைகளை குறைக்கும்.

8. ஞாயிற்றுக்கிழமை மாலை ராகு கால வேளையில் கால பைரவரை வணங்கி வரலாம்.

9. தேய்பிறை அஷ்டமி தினத்தில் கால பைரவரை வணங்குவது பலன் தரும்.

10. சனிக்கிழமை விரதம் இருந்து பெருமாளை வழிபட்டு, காக்கைக்கு உணவு வைக்க சனி பகவான் தோஷத்தில் இருந்து விலகலாம்.

திருத்தலம்1.திருநள்ளாறு

.2.குச்சனூர்.தேனி மாவட்டம் இங்கு சனிபகவான்சுயம்புவாக எழுந்தருளியுள்ளார் என்பது விசேஷம்...

)ஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓ

ராகு, கேதுவால் ஏற்படும் தோஷங்களும் பரிகாரங்களும்!

www.facebook.com/ebooksintamil



ராகு-கேது தோஷம் ஒருவருக்கு ஏன் ஏற்படுகிறது என்பதற்கு எத்தனையோ விதமான காரணங்கள் சொல்லப்படுகின்றன. அம்மன் கோவில் இருக்கும் இடத்தை ஆக்கிரமித்து - அம்பாளின் கோபத்திற்கு ஆளானதால் ஏற்படலாம்.

மூதாதையர்கள் செய்கின்ற புண்ணியங்கள் கிடைக்கிற போது அவர்கள் செய்யும் சில ரகசியமான பாவங்களை மூன்றாவது தலைமுறைக்கு எடுத்துக் காட்டவும் ராகு - கேது தோஷங்கள் ஏற்படலாம்.

சேர்ந்திருந்த தம்பதிகளை - அதிகாரத்தினாலோ அல்லது பகைமையினாலோ பிரித்த பாவத்தை அவர்களது மூன்றாவது தலைமுறையினர்கள் பெறுவதை சுட்டிக் காட்டவே ராகு - கேது தோஷம் ஏற்படுகிறது.

வயதான பெண்களை முன் ஜென்ம காலத்தில் சரியாகக் கவனிக்காமல் கொடுமைப்படுத்தியதற்கு - அவர்கள் இட்ட சாபம் கூட ராகு-கேது தோஷமாக மாறி மூன்றாம் தலைமுறையினருக்கு காலாகாலத்தில் திருமணம் நடைபெறாமல் தடுக்கவும், களத்திர ஸ்தானத்தில் ராகு ஜென்மத்தில் கேதுவாக மாறி கெடுதலைச் செய்கிறது.

குடும்பத்தைப் பிரித்து பெரியோர்களது சாபத்தைப் பெற்றதினால் அவர்களது சாபம் நிறைவேற குடும்ப ஸ்தானத்தில் ராகுவும், அஷ்டத்தில் கேதுவுமாக இருந்து மூன்றாவது தலைமுறையினரது

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil

இல்வாழ்க்கையை நிம்மதி இல்லாமல் ஆக்குவதோடு வாழ்க்கையில் முன்னேற விடாமல் தடுக்கவும் ‘ராகு-கேது’ செயல்படுகிறது.

சகோதரர்களை வஞ்சனை செய்து - கெடுத்து - ஏமாற்றி அவர்களது உண்மையான பாசத்தை மதிக்காமல் உதறித்தள்ளி கைவிட்ட போது - ‘அவர்கள் அடிவயிற்றிலிருந்து இட்ட சாபம்- ஒருவருக்கு மூன்றாவது வீட்டில் ராகுவும், தர்ம கர்மா ஸ்தானமாக 9-ம் வீட்டில் கேதுவும் இருக்கிறார்கள். ராகு-கேது தோஷம் அதிக பலமுள்ளதாகவே இருக்கும்.

சொத்து விஷயத்தில் ஏமாற்றிப் பிடுங்கியதோடு பெற்ற தாயின் வயிற்றெரிச்சலைக் கொட்டியதால் முன் ஜென்மத்தில் அந்த அன்னை இட்ட கண்ணீர் ராகு-கேதுவாக மாறி இந்த ஜென்மத்தில் இருக்கிற சுகங்களை இழக்க வைப்பதோடு சிறு வயதில் தாயைப் பறிக்கொடுக்க அல்லது இருக்கிற சொத்து சுகங்களை தேவை இல்லாமல் இழக்க நான்காம் வீட்டில் ராகுவும் அல்லது கேதுவும்.

வேலை செய்தபோது கூலி கொடுக்காமல் ஏமாற்றிய பாவமும் பொறாமை காரணமாக இன்னொருவர் வேலையைப் பறிக்க வைத்து, அந்தக் குடும்பத்தை நடுத்தெருவில் நிற்க வைத்த பாவமும் சேர்ந்து ராகு-கேதுவாக மாறி இன்றைக்கு ஜீவனஸ்தானத்தில் அமர்ந்து தொழிலில் முன்னுக்கு வர முடியாமல் - தடுமாற வைக்க ராகு -4ல், அல்லது 10ல் கேது 4ல் அல்லது 10ல் அமர்ந்து தோஷத்தை உண்டாக்கிக் கொண்டிருப்பார்கள்.

குழந்தைகளை- குழந்தையென்று பாவிக்காமல் அவர்களைக் கொடுமைப்படுத்தி பெற்றோர்கள் அப்போது கடமையைத் தவற விட்டதின் காரணமாகவும், அந்தக் குழந்தைகள் அழுத ஒவ்வொரு கண்ணீர் துளியும் ராகு-கேதுவாக விஸ்வரூபம் எடுத்து இன்றைக்கு புத்திர பாக்கிய ஸ்தானத்தில் இருக்கலாம்.

நம்பிய நண்பர்களை ஏமாற்றி பிரித்து நடுத்தெருவில் நிறுத்தி விட்டு சொத்து, சுகம் போன்றவற்றை அபகரித்ததை முன் ஜென்மத்தில் செய்தமைக்காக இப்போது ஆறாம் வீட்டில் ராகு அல்லது கேது

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil

அல்லது பன்னிரண்டாம் வீட்டில் ராகு அல்லது கேது இருக்கலாம் என்று அகஸ்தியரின் ஜீவ நாடியில் அகத்திய மாமுனிவர் மிகத்தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஒருவரின் ஜாதகத்தில் ராகு கேதுகளுக்கு இடையில் லக்னம் உள்பட அனைத்து கிரகங்களும் அமையும் நிலை 'கால சர்ப்பதோஷம்' என்று அழைக்கப்படுகிறது. ஒருவரது ஜாதகத்தில் பாதி கட்டங்கள் காலியாக இருந்தால், அது பூரண கால சர்ப்பதோஷம் ஆகும். ஏதாவது ஒரு கிரகம் இதைவிட்டு வெளியே சென்றாலும், அது தோஷம் இல்லை. ராகு கேதுவால் ஏற்படும் கால சர்ப்ப தோஷமும் அதற்குரிய பரிகாரங்களும் என்ன என்பது பற்றி ஜோதிட நிபுணர் ஆஸ்ட்ரோ கிருஷ்ணனிடம் கேட்டோம்.

"கால சர்ப்பதோஷம் என்றதும் பயப்படத்தேவையில்லை. இது தீமை செய்யாது. பலவீனமான கிரகங்கள் அல்லது வீடுகள் இவற்றுக்கு ராகு, கேது பார்வை, சேர்க்கை பெற்றால் மட்டுமே கால சர்ப்பதோஷம் தீமை செய்யும். இந்த தோஷம் பல வகைப்படும். அவை பின் வருமாறு:

1. அனந்த கால சர்ப்பதோஷம் (விபரீத கால சர்ப்பதோஷம்): லக்னத்தில் ராகுவும் 7- ம் வீட்டில் கேதுவும் அமைந்து இவற்றிற்கு இடையில் மற்ற கிரகங்கள் அமைவது. 27 வயது வரை சிரமமும் பிறகு நல்ல மாற்றங்களும் ஏற்படும்.

2. குளிகை கால சர்ப்பதோஷம்: 2 -ம் வீட்டில் ராகு 8 - ம் வீட்டில் கேது : இந்த அமைப்பு எதிர்பாராத பொருள் இழப்பையும், பூர்வீக சொத்துகளை இழக்கும் நிலையும், உடல் நலக் குறைவு, விபத்து போன்றவையும் ஏற்படும். 32 வயதுக்கு மேல் யோகம் ஏற்படும்.

3. வாசுகி கால சர்ப்பதோஷம்: 3 - ம் வீட்டில் ராகு 9-ம் வீட்டில் கேது: இந்த அமைப்பு ஜாதகரின் தொழிலில் அல்லது அவரது வேலையில் பிரச்னைகளைக் கொடுக்கும். சகோதரி, சகோதரர்களுக்குள் பிரச்னை, தேவையான சமயத்தில் உதவிகள் கிடைக்காமை, துணிந்து எதையும் செய்யமுடியாமல் இருப்பது போன்ற பலனைத் தரும். 36 வயதுக்கு மேல் நல்ல பலனைத்

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil

தரும்.

4. சங்கல்ப கால சர்ப்பதோஷம்: 4-ம் வீட்டில் ராகு 10-ம் வீட்டில் கேது: குடும்ப வாழ்க்கையில் ஏதாவது ஒரு கவலை அழுத்திக்கொண்டே இருக்கும். இதனால் மன அழுத்தம் போன்றவை ஏற்படும் . 42 வயதுக்கு மேல் நல்ல பலன் தரும்.
5. பத்ம கால அல்லது பாத கால சர்ப்பதோஷம்: 5-ம் வீட்டில் ராகு 11 -ம் வீட்டில் கேது: இதுதான் புத்திர தோஷத்தை கொடுக்கக் கூடிய மிகவும் பாதகமான சர்ப்பதோஷம் ஆகும். நண்பர்கள், பழகியவர்கள்கூட விரோதியாவார்கள். எடுத்த காரியங்களில் தடை உண்டாகும். 48 வயதுக்கு மேல் நல்ல பலனைக் கொடுக்கும்.
6. மஹா பத்ம கால சர்ப்பதோஷம்: 6-ம் வீட்டில் ராகு, 12 - ம் வீட்டில் கேது: இது முக்கியமாக அரசியல்வாதிகளுக்கு அமையும். ஏன் என்றால், இது பிற்காலத்தில் நல்ல புகழையும், அதிகாரப் பதவியையும், அந்தஸ்தையும் கொடுக்கவல்லது. இந்த அமைப்பு எதிரிகளால் பிரச்னை, சிறைவாசம், வீண் விரயங்கள், அரச தண்டனை போன்ற பலன்களைத் தரும். பிறகு 54 வயதுக்கு மேல் முன்பு சொன்ன புகழ், அதிகாரம், அந்தஸ்து போன்றவற்றைத் தரும். சிலர் தன் கௌவரத்துக்காக கோயில் திருப்பணி, அறக்கட்டளை போன்றவை நிறுவி தொண்டு செய்வார்கள்.

7. தட்சக கால அல்லது கால மிருத்யு சர்ப்பதோஷம்: 7 - ம் வீட்டில் ராகு லக்னத்தில் கேது: 27 வயதுக்கு முன் திருமணம் செய்து கொண்டால், கணவன் மனைவிக்குள் பிரச்னை ஏற்பட்டு விவாகரத்து வரை செல்லும், சிலர் இரண்டாம் திருமணம் செய்து கொள்ளாமல் தெய்வ திருப்பணியில் ஈடுபடுவதும் உண்டு.
8. கார்க்கோடக கால சர்ப்பதோஷம்: 8 - வீட்டில் ராகு 2 - வீட்டில் கேது: மிகவும் கொடிய தோஷம். தனக்குத் தானே அழிவை ஏற்படுத்திக் கொள்வார். தந்தையின் பணத்துக்காக அவருக்கு ஆபத்தை விளைவிக்கவும் துணிவார். அதனால், தந்தை வழி சொத்து இவருக்குக் கிடைப்பது கடினம். மற்றவர்களின் இன்ஷூரன்ஸ் பணம் இவருக்கு கிடைக்கும்.
9. சங்க குட கால சர்ப்பதோஷம்: 9 -ம் வீட்டில் ராகு 3 -ம் வீட்டில் கேது: வாழ்க்கை மேடுபள்ளமானதாக இருக்கும். சில நாள்கள் முன்னேற்றம், சில நாள்கள் தாழ்வுநிலை, சில நாள்கள் பிரபலமாகவும், சில நாள்கள் தலைமறைவு வாழ்க்கையும்

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil

நடத்துவார்கள். 36 வயதுக்கு மேல் நல்ல பலனைத் தரும்.

10. கடக கால சர்ப்பதோஷம்: 10 -ம் வீட்டில் ராகு 4 -ம் வீட்டில் கேது: தொழிலில் தடை , அலுவலகங்களில் அவமரியாதை ஏற்படும். ஆனால், 47 வயதுக்குப் பிறகு மிகச் சிறந்த தொழிலதிபர் ஆவார். வேலையில் உயர் பதவி கிடைக்கும். ஆனால் சிம்மம், கன்னி லக்னகாரர்களுக்கு இந்த அமைப்பு இருந்தால் அரசாங்கத்தில் உயர் பதவி கிடைக்கும்.
11. விஷ்தார கால சர்ப்பதோஷம்: 11 ம் வீட்டில் ராகு 5 -ம் வீட்டில் கேது: வெளி நாட்டில் வாசம். குழந்தைகள் மூலமாக வருத்தங்கள் ஏற்படும். அடிக்கடி பயணம் ஏற்படும். 48 வயதுக்கு மேல் நல்ல பலன் உண்டு.
12. சேஷ கால சர்ப்பதோஷம் : 12 -ம் இடத்தில் ராகு 6-ம் இடத்தில் கேது: அசுபர்கள் மறைவு ஸ்தானத்தில் இருப்பதால் நல்ல பலன் உண்டாகும். கல்வியில் சிறந்த நிபுணத்துவத் தன்மை ஏற்படும்.வெளிநாட்டில் உயர் கல்வி பயிலும் வாய்ப்பு உண்டாகும். வயோதிக காலத்தில் பேரும், புகழும் உண்டாகும்.

ராகு கேது பெயர்ச்சி என்பது ஒரு ராசிக்கு 18 மாதங்கள் இருக்கும். பொதுவாகவே ராகு கேதுகள் இருக்கும் இடத்துக்கேற்ப அந்த வீட்டின் அதிபதியைப் போல் பலன் தருவார். உதராணத்துக்கு மேஷத்தில் இருந்தால் செவ்வாயைப் போல் பலனைத் தருவார். ரிஷபத்தில் இருந்தால் சுக்ரனைப் போல் பலனைத் தருவார். அதாவது அந்த வீட்டின் உரிமையாளரைப் போல் பலனை தருவார்.

மேஷத்தில் அதிக சீற்றத்தையும், ரிஷபத்தில் அதிக ஆசையையும், மிதுனத்தில் அதிக காதலையும், கடகத்தில் குடும்பப் பிரிவையும், சிம்மத்தில் அதிக ஆணவத்தையும், கன்னியில் சுயநல புத்தியையும், துலாத்தில் வியாபார மேன்மையையும், விருச்சிகத்தில் அதிக வேகத்தையும், தனுசில் அதிக ஆன்மிகத்தையும், மகரம், கும்பத்தில் விஷ வாக்கையும், மீனத்தில் அதிக பொருள் ஆசையையும் தரும். ராகு கேது பெயர்ச்சியில் அது எந்த பாவத்தில் உள்ளது என்பதை அறிந்து அதற்கேற்ப பரிகாரம் செய்யலாம்.

பொதுவான பரிகாரமாக தோஷத்தின் வீரியம் குறைய, பெருமாள் கோயிலில் உள்ள கருடாழ்வாருக்கு அர்ச்சனை செய்வது நல்லது.

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil

ராகு கேதுகள் எந்த நட்சத்திரத்தில் நிற்கிறார்களோ அந்த நட்சத்திரத்தின் அதிதேவதைக்கு அர்ச்சனை செய்வதும் நல்லது. பாம்பின் மேல் பள்ளிகொண்டிருக்கும் பெருமாள் கோயிலில் பரிகாரம் செய்துகொள்வது நல்லது.

சுவாதி, சதயம், திருவாதிரை நட்சத்திரம் வரும் நாள்களில், அருகில் உள்ள சிவன் கோயிலில் பிரதோஷ காலத்தில் சிவனுக்கு வில்வ அர்ச்சனை செய்தால், ராகு கேதுவின் விஷத்தன்மை நீங்கும்.

பாம்பை அடித்துக் கொன்றவர்கள், பாம்புப் புற்றை இடித்தவர்கள் இந்த தோஷத்தின் பிடியில் இருப்பார்கள். அவர்கள் ஆடி, தை மாத வெள்ளிக்கிழமைகளில் பாம்புப் புற்றுக்குப் பால் ஊற்றுவது அல்லது நாகர் சிலைக்கு பால் அபிஷேகம், மஞ்சள் காப்பிட்டு வழிபடுவது சிறந்த பரிகாரமாகும்.

ஜாதக ரீதியாக ஐந்து, ஆறு, ஏழு, எட்டாம் இடத்தில் ராகு இருப்பவர்கள், விஷத்தன்மை அதிகமுள்ளவர்கள். இதனால், அவர்களின் சந்ததி வளர்ச்சி தடைப்படும். அதற்கு இதை முறிக்கக்கூடிய விதமாக, அருகம்புல் சாறு, ஆலவ் வீரா எனப்படும் சோற்றுக் கற்றாழைச் சாறு எடுத்துக்கொள்வது நல்லது. சிவஸ்துதி சொல்வதும் நல்லது. வைணவர்கள் கருட தண்டகம் படிப்பது நல்லது"

## பரிகார தலங்கள்

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடிக்கு அருகே உள்ளது திருக்களாச்சேரி. மகாவிஷ்ணு வழிபட்ட தலம் என தலபுராணம் கூறுகிறது.

ராகு- கேது தோஷம் உள்ளவர்கள், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில், ராகு கால வேளையில் இங்கு வந்து, நாகலிங்கப் பூ, வில்வம் மற்றும் வன்னி இலை ஆகியவற்றை சமர்ப்பித்து, தல விருட்சமான குரா மரத்தில் மஞ்சள் கயிறு கட்டி மனதாரப் பிரார்த்தனை செய்தால், ராகு- கேது தோஷம் விலகும்.

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil




ஸ்ரீகாளஹஸ்தி

ஸ்ரீகாளஹஸ்தி, ஆந்திர மாநிலத்தில் உள்ள புகழ்பெற்ற தலங்களில் ஒன்று. இது வாயுத் தலம். காற்றாக எம்பெருமானே எழுந்தருளியிருக்கும் தலம். இங்கு வழிபட்டால் ராகு-கேது தோஷம் உள்பட சகல தோஷமும் விலகும் என்பது ஐதீகம்.

சென்னை ஸ்ரீகோலவிழி அம்மன்

சென்னை மயிலாப்பூர் பகுதியில் உள்ளது ஸ்ரீபத்ரகாளியம்மன் மற்றும் ஸ்ரீகோலவிழி அம்மன் கோயில்.

ராகு தோஷம் உள்ளவர்கள், இங்கு வந்து வேண்டிக் கொண்டால், விரைவில் தோஷம் நீங்கும் என்பது ஐதீகம்.

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil




காஞ்சி ஸ்ரீமாகாளீஸ்வரர் கோயில்

காஞ்சிபுரம் ஸ்ரீகாமாட்சி அம்மன் கோயிலுக்கு அருகே உள்ள ஜவஹர்லால் தெருவில் அமைந்துள்ளது ஸ்ரீமாகாளீஸ்வரர் கோயில். ராகுவும் கேதுவும் தங்களின் பாவ விமோசனத்துக்காக, இங்கு ஸ்ரீமாகாளீஸ்வரரை பிரதிஷ்டை செய்து வழிபட்டதாகச் சொல்கிறது தல புராணம். சிவனார் ராகு-கேதுவை தனது கைகளில் ஏந்தியபடி, அம்பிகையுடன் அருள் வழங்கும் தரிசனம் இக்கோயிலின் சிறப்பம்சம்!

இங்கு வழிபட்டால், அனைத்து தோஷங்களும் நீங்கும். ராகு- கேது பெயர்ச்சியின்போது, இங்கு பரிகார ஹோமங்களும் சிறப்பு வழிபாடுகளும் நடைபெறுகின்றன

ராகு காயத்ரி:

நாக த்வஜாய வித்மஹே!
பத்ம ஹஸ்தாய தீமஹி!
தந்நோ ராகு ப்ரசோதயாத்!

கேது காயத்ரி:

அச்வ த்வஜாய வித்மஹே!
சூல ஹஸ்தாய தீமஹி!

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil

தந்நோ கேது ப்ரசோதயாத்!

இதை வீட்டிலிருந்தபடியே
தினமும் 108 முறை ஓதி வந்தால் எங்கும் அலையாமல் பலன் பெறலாம்
புதன் காயத்ரி மந்திரம் :

ஓம் கஜத்துவ ஜாய வித்மஹே
சுக ஹஸ்தாய தீமஹி
தன்னோ புத : பிரசோதயாத்

இந்த பாடலை பாடி புதன் அருளை பெற உங்க எல்லோருக்காகவும் பிராத்திக்கிறேன். புதன் கிழமை அன்று நாராயணை வழிபட்டு பின்னர் நவக்கிரங்களை வணங்கி, பின் புதன் பகவான் முன் நின்று வழிபட வேண்டும். இப்படி செய்தால் சகல சிறப்புகளையும் அடையலாம்.

இதர தோஷங்கள்
1.பித்ருக்கள் தோஷம் அல்லது சாபம்

அமாவாசை அன்று, ஆறு, குளம், கடல் என்று புனித நீர்நிலைகளில் நீராடி, முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்து வழிபடுவது வழக்கம். இப்படி நம் முன்னோர்களை நினைத்து தர்ப்பணம் கொடுத்து வழிபடாவிட்டால், நமக்கு பித்ரு தோஷம் ஏற்பட்டு, நம் வாழ்க்கையிலும் சரி, நம் சந்ததியினரின் வாழ்க்கையிலும் சரி பல வகையான பிரச்னைகள் தோன்றி வேதனைப்படுத்தும். எனவே, அமாவாசை அன்று முன்னோர்களை வழிபடுவது மிகவும் உத்தமம். அதனால் முன்னோர்களின் ஆசிகள் நமக்குக் கிடைக்கும். முன்னோர் வழிபாடு முறைப்படி செய்யாதவர்களுக்கு பித்ரு தோஷம் ஏற்படுகிறது. ஒருவரின் ஜாதகத்தில் பித்ரு தோஷம் இருந்தால் எப்படி கண்டுபிடிப்பது

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil

"இந்த உலகத்தில் நாம் வந்து பிறந்து இந்த வாழ்க்கையை அனுபவிப்பதற்கு முதற் காரணம் நம்மைப் பெற்றவர்கள்தான் என்பது நம் எல்லோருக்கும் தெரிந்த உண்மை. நம்மை நல்ல முறையில் வளர்த்து ஆளாக்கிய அவர்களுக்கு அவர்கள் உயிரோடு இருக்கும்போதே நாம் செய்ய வேண்டிய கடமைகள் ஏராளமாக இருந்தாலும், அவற்றில் சிறிதளவாவது அவர்கள் மனம் குளிரும்படி செய்திருக்கிறோமா

என்று எண்ணிப் பார்க்கவேண்டும். அதில் நாம் ஏதாவது குறையோ அல்லது தவறோ செய்து, அதற்குள் அவர்கள் அமரராகி விட்டால், அவர்களுக்கு நாம் செய்யவேண்டிய 'பித்ரு கடன்'களை வருடா வருடம் நாம் தவறாமல் செய்யவேண்டியது நமது தலையாய கடமையாகும்.

அதாவது நமக்கு 365 நாள்கள் என்பது நமது பித்ருக்களுக்கு ஒரு நாளாகும். எனவே, அவர்களுக்கு ஒவ்வொரு நாளும் நாம் உணவளிக்க வேண்டும். அதாவது நமது கணக்குப்படி வருடத்துக்கு ஒரு முறை அவர்களுக்குச் செய்யவேண்டிய பித்ரு கர்மாக்களை அவர்கள் இறந்த திதியில் ஒரு புரோகிதரை அழைத்து முறைப்படி செய்து நம் முன்னோர்களுக்கு பிண்டம் (உணவு) அளிக்கவேண்டும்.

அப்படி நாம் செய்யத் தவறிவிட்டால், நம் பித்ருக்களின் மனம் வருத்தம் அடையும். அந்த வருத்தமே நமக்கு பித்ரு தோஷத்தை ஏற்படுத்துகிறது. பித்ரு தோஷம்
நமக்கு மட்டுமல்லாமல், நம் சந்ததியினருக்கும் ஏற்பட்டுவிடுகிறது. நமக்குப் பிறக்கும் குழந்தைகளின் ஜாதகம் மூலமாக பித்ரு தோஷம் இருப்பதை நாம் தெரிந்துகொள்ளலாம்.

www.facebook.com/ebooksintamil

இதை நாம் கவனிக்காமல் இருந்து விட்டோம் என்றால் நாம் நம் வாழ்க்கையில் அநேக துன்பங்களை சந்திக்க நேரிடும். அது தொடர்கதையாக நம் வாழ்க்கையிலும் நம் குழந்தைகளின் வாழ்க்கையிலும் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும்போதுதான் நாம் நம் ஜாதகத்தை எடுத்துக்கொண்டு ஒரு ஜோதிடரை நோக்கிப் போகிறோம். அது எந்த அமைப்பில் இருக்கும் என்பது பற்றியும் அதற்கு என்ன பரிகாரம் என்பது பற்றியும் இங்கு பார்ப்போம்.

* குருவானவர் ராகு, கேதுவின் நட்சத்திரத்தில் நின்றாலோ, அல்லது குருவானவர் ராகு, கேது சேர்க்கை பெற்று ராசியிலும், நவாம்சத்திலும் இருந்தால் தோஷம்.

* சூரியன், சந்திரன் செவ்வாயின் ராசி அல்லது செவ்வாயின் நவாம்ச வீட்டில் இருந்து அது பாதக ஸ்தானம் பெற்றால் தோஷம்.

* கடகம், சிம்மம் லக்னத்துக்கு பாதக ஸ்தானம் பெற்று, அதில் கொடிய பாவி இருந்தால் பித்ரு தோஷம் வரும்.

* சூரியன் பாதிக்கப்பட்டு கொடிய பாவியுடன் சேர்ந்தாலோ அல்லது சந்திரன் பாதிக்கப்பட்டு கொடிய பாவியுடன் சேர்ந்தாலோ பித்ரு தோஷம் தந்தை வழியிலோ, தாய் வழியிலோ ஏற்பட்டிருக்கலாம் என்பதைக் காட்டுகிறது.

* 6-ம் வீட்டுக்கு உடையவர் 9-ம் வீட்டில் இருந்தாலும் அல்லது 9-ம் வீட்டுக்கு உடையவர் 12 -ம் வீட்டில் இருந்தாலும் தந்தையும் அவரது முன்னோர்களும் மகிழ்ச்சியாக இல்லை என்பதால் பித்ரு தோஷம் ஏற்பட்டிருக்கும்.

* சந்திரன் 6-ம் வீட்டில் இருந்தாலும், அல்லது 6-ம் வீட்டுடன் தொடர்பு கொண்டாலும் தாயும் அவரது முன்னோர்களும் ஜாதகரிடத்தில் மகிழ்ச்சியாக இல்லை என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

பரிகாரம் : அனுஷம், பூசம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி, திருவாதிரை, சுவாதி, சதயம், அவிட்டம் இந்த நட்சத்திரத்தில் அமாவாசை வருமானால், அன்றைய தினம் சிராத்தம் செய்தால்,

பித்ரு தோஷம் நீங்கும். மஹாளய பக்ஷத்தில் வரும் பரணி நட்சத்திரத்தில் திதி கொடுத்தால் மிகவும் விசேஷமாகும். ஏனென்றால் இந்த பரணி மஹா பரணி எனப்படும். அட்சய திரிதியை வரும் நாளில் பித்ருக்களுக்கு சிராத்தம் செய்தால் பித்ரு தோஷம் நீங்கும்.

மேற்கூறிய நாள்களில் சிராத்தம் செய்தாலோ, அல்லது காளஹஸ்தி சென்று அங்கு 'பித்ரு பூஜை' செய்தாலோ பித்ரு தோஷம் நிவர்த்தி ஆகி சகல சௌபாக்யங்களும் வந்து சேரும்

## 2.அண்ண தோஷம்

நாம் உண்ணும் உணவில் ஐந்து வகையான தோஷங்கள் இருப்பதாக சொல்லப்படுகிறது. அவை அர்த்த தோஷம், நிமித்த தோஷம், ஸ்தான தோஷம், குண தோஷம், சம்ஸ்கார தோஷம் ஆகும். இந்த ஐந்து வகையான தோஷங்களைப் பற்றி இங்கே பார்க்கலாம்.

### அர்த்த தோஷம்

இந்த தோஷத்தைப் பற்றி, ஒரு குட்டிக் கதையின் மூலமாக நாம் அறிந்து கொள்ளலாம். ஒரு துறவி, தன்னுடைய சீடனின் வீட்டிற்கு உணவருந்துவதற்காக சென்றிருந்தார். உணவருந்திக் கொண்டிருக்கும் போது, தனது சீடனிடம் ஒரு நபர் பணம் நிரம்பிய மூட்டை ஒன்றைக் கொடுப்பதை துறவி பார்த்தார்.

உணவருந்தி முடித்ததும் துறவி ஒரு அறையில் ஓய்வு எடுத்தார். அந்த அறையில்தான் சீடன் வாங்கி வைத்த பணம் நிரம்பிய மூட்டை இருந்தது. திடீரென்று துறவியின் மனதில் தீய எண்ணம் உண்டாகி, அந்த மூட்டையில் கையை விட்டு கொஞ்சம் பணத்தை எடுத்து மறைத்து வைத்துக் கொண்டார். பின்னர் சீடனிடம் விடை பெற்றுக் கொண்டு வீடு திரும்பினார்.

மறு நாள் காலையில் பூஜை செய்யும் போது, முதல் நாள் தான் செய்ததை நினைத்துப் பார்த்தார், துறவி. அவருக்கு தான் எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டோம் என்பது உறைத்தது. சீடனின் வீட்டில் உணவருந்திய பின்னர்தான் இந்த கெட்ட எண்ணம் தோன்றியது. அந்த உணவு இரவில் ஜீரணமாகி, காலையில் கழிவாக வெளியேறிய பின்னர் மனம் பரிசுத்தம் ஆனதையும் அவர் எண்ணிப்பார்த்தார்.

www.facebook.com/ebooksintamil

உடனடியாக பணத்தை எடுத்துக் கொண்டு சீடனின் வீட்டிற்குச் சென்றார். நடந்ததைச் சொல்லி பணத்தைத் திருப்பிக் கொடுத்தார்.

பின்னர், 'நீ சம்பாதித்த பணம் எப்படி வந்தது?' என்று சீடனிடம் கேட்டார்.

அதற்கு அந்த சீடன் தலைகவிழ்ந்தபடியே, 'நான் நேர்மையற்ற வழியில்தான் பணம் சம்பாதித்தேன்' என்று ஒப்புக்கொண்டான்.

இப்படி நேர்மையற்ற வழியில் சம்பாதிக்கும் பணத்தினால் வாங்கப்படும் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் உணவுகளை உண்பதால் வருவதே 'அர்த்த தோஷம்.' இங்கே 'அர்த்தம்' என்பதற்கு 'பொருள்' என்று சொல்வார்கள். நாம் சமைக்கும் உணவுப் பொருட்கள் நியாயமான சம்பாத்தியத்தில் வாங்கியதாக இருக்க வேண்டியது அவசியம்.

## நிமித்த தோஷம்

நாம் சாப்பிடும் உணவைச் சமைக்கும் நபர், நல்ல மனதுடன் இருக்க வேண்டியது அவசியம். அவர் நேர்மையானவராகவும், அன்பானவராகவும், நல்ல சுபாவம் கொண்டவராகவும் இருக்க வேண்டும். மேலும் சமைக்கப்பட்ட உணவானது, நாய், எறும்பு, பல்லி, காகம் போன்றவற்றால் தீண்டப்படாமல் இருப்பதும் முக்கியம். உணவில் தூசி, தலை முடி, புழுக்கள் போன்றவையும் இருக்கக்கூடாது. மேற்சொன்ன ஏதேனும் ஒரு குற்றம் இருந்தாலும் அந்த உணவை சாப்பிடுபவர்களுக்கு 'நிமித்த தோஷம்' ஏற்படும்.

அசுத்தமான உணவு, மன அசுத்தத்தையே விளைவிக்கும். தீயவன் சமைத்த உணவு தீமையான எண்ணங்களையே உண்டாக்கும். நல்லவன் சமைத்த உணவால்தான் மனதில் நற்சிந்தனைகள் எழும்.

குருசேத்திரப் போரில் அம்புகளால் துளைக்கப்பட்ட பீஷ்மர், போர் முடியும் நாள் வரை அம்புப் படுக்கையிலேயே உயிரோடு இருந்தார். அவரைச் சுற்றி கிருஷ்ணரும், பாண்டவர்களும், திரவுபதி போன்றவர்களும் இருந்தனர். அவர்களுக்கு பீஷ்மர் அறிவார்ந்த சிந்தனைகளின் மூலமாக பல நல்ல மொழிகளை சொல்லிக்கொண்டிருந்தார்.

www.facebook.com/ebooksintamil

அப்போது திரவுபதியின் மனதில் ஒரு எண்ணம் ஓடியது. ‘இப்போது இவ்வளவு அறிவார்ந்து சிந்திக்கும் பீஷ்மர், அன்று என்னை சபையில் துரியோதனன் ஆடையை அவிழ்க்க உத்தரவிட்ட போது, எதற்காக வாயை மூடிக் கொண்டிருந்தார்’ என்று நினைத்தாள்.

அவளது மன ஓட்டத்தை அறிந்து கொண்ட பீஷ்மர், ‘தாயே! நான் துரியோதனின் ஆதரவில் அவனால் படைக்கப்பட்ட உணவை சாப்பிட்டு வந்தவன். என் அறிவை முற்றிலுமாக அந்த உணவு மறைத்து விட்டது. அம்பால் துளைக்கப்பட்டு, இவ்வளவு நாள் நான் சாப்பிடாமல் இருந்ததால், என் பழைய ரத்தம் சொட்டுச் சொட்டாக வெளியேறி, நான் பரிசுத்தனாகிறேன். எனது அறிவும் பிரகாசிக்கிறது’ என்றார்.

## ஸ்தான தோஷம்

மூன்றாவதாக நாம் பார்க்கப் போவது ‘ஸ்தான தோஷம்.’ எந்த இடத்தில் உணவு சமைக்கப்படுகிறதோ அங்கு நல்ல அதிர்வுகள் இருக்க வேண்டும். சமைக்கும் போது தேவையற்ற பிரச்சினைகள், அற்ப காரியங்களுக்காக விவாதங்கள் போன்றவை நடந்தால், அதனால் அந்த உணவு அசுத்தப்பட்டு விடும். அதே போல் கழிப்பறை, மருத்துவமனை, யுத்த களம், வழக்கு மன்றம் ஆகியவற்றின் அருகே சமைக்கப்படும் உணவும் சாப்பிடுவதற்கு உகந்தது அல்ல.

துரியோதனன் 56 விதமான விசேஷ உணவு வகைகளைத் தயாரித்தான். அதனை உண்பதற்காக கிருஷ்ணரை அழைத்தான். ஆனால் கிருஷ்ணரோ உணவருந்த மறுத்து விட்டார். அதனால் கோபம் கொண்ட துரியோதனன், கிருஷ்ணரை சிறைப்பிடிக்கவும் முயன்றான். ஆனால் கிருஷ்ணரோ நேராக விதுரரின் வீட்டிற்குச் சென்றார். அவரைப் பார்த்த விதுரரின் மனைவி மகிழ்ச்சியில் திளைத்தாள்.

www.facebook.com/ebooksintamil



கிருஷ்ணரை கண்ட ஆனந்தத்திலும், பதற்றத்திலும், அவருக்கு என்னத் தருகிறோம் என்பதை உணராத நிலையிலும், வாழைப்பழத்தை உரித்து பழத்தைத் தூக்கி எறிந்து விட்டுதோலை அன்புடன் கொடுத்தாள். அதை வாங்கித் தின்ற கிருஷ்ணர் மகிழ்ச்சியடைந்தார். ஆனால் இதையெல்லாம் கண்ட விதுரர் பதறிப்போனார். தன்னுடைய மனைவியை கோபமாக பார்த்தார்.

கிருஷ்ணரோ, ‘விதுரரே! நான் அன்பிற்காகத் தான் ஏங்குகிறேன். எனக்கு உள்ளன்புடன் ஒரு துளி ஜலம், ஒரு இலை, ஒரு பழம் என்று எதைத் தந்தாலும், அதுவே எனக்குப் போதும்’ என்று அருளினார்.

ஆம்.. நாம் ஒருவருக்கு படைக்கும் உணவை, உள்ளன்புடன் பரிமாற வேண்டியது மிகவும் அவசியம்.

குண தோஷம்

நாம் சமைக்கும் உணவில் அடங்கி இருக்கும் மூலப் பொருட்கள், சாத்வீக குணமுடையதாக இருக்க வேண்டும். பால், நெய், அரிசி, மாவு, பருப்பு போன்றவை சாத்வீகமானவை. புளிப்பு, உரைப்பு,

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil

உப்பு உள்ளிட்டவை ராஜஸிகமானவை. பூண்டு, வெங்காயம், மாமிசம், முட்டை போன்றவை தாமஸிகமானவை. சாத்வீக உணவு ஆன்மிக முன்னேற்றத்தைத் தருகிறது. ராஜஸிக உணவு உலக மாயையில் சிக்கும் உணர்வைத் தூண்டி சுயநலத்திற்கு வழி வகுக்கிறது. தாமஸிக உணவு தீய எண்ணங்களை வளர்க்கிறது.

சம்ஸ்கார தோஷம்

தூய்மையாக உணவு சமைக்கப்பட்டாலும் கூட, உணவு வகைகள் ஒன்றுடன் ஒன்று மாறுபட்டிருக்கக் கூடாது. அதிகமாக வேக வைத்தல், அதிகமாக வறுத்தல், பழைய உணவு போன்றவை தோஷமானவை. உடம்புக்கும் உள்ளத்திற்கும் ஊறு விளைவிப்பவை. இதைத்தான் 'சம்ஸ்கார தோஷம்' என்கிறார்கள்.

இந்த ஐந்து வித தோஷங்களையும் விலக்கி, ஒருவன் உணவை உண்ண வேண்டும். அதனால் தான் அன்னை அல்லது மனைவியால் இல்லத்தில் சமைத்து பரிமாறப்படும் உணவை ஏற்பது நல்லது என்று முன்னோர்கள் சொல்லி வைத்தனர்.

3.ஒருவர் செய்யும் பாவங்கள், தவறுகள் எல்லாம் இந்த 5 வகை தோஷத்துக்குள் வந்து விடுகிறது.

அந்த தோஷங்கள்

1. வஞ்சித தோஷம்
2. பந்த தோஷம்
3. கல்பித தோஷம்
4. வந்தூலக தோஷம்
5. ப்ரணகால தோஷம்

வஞ்சித தோஷம்:

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil

பார்க்கக் கூடாத படங்கள், வெறியூட்டும் காட்சிகள் காம சிந்தனைகள் உடலில் சூட்டை உண்டாக்கி, அவை பித்த நாடிகளைப் பாதிக்கச் செய்கிறது. இது உடலில் பல வியாதிகளை உண்டாக்குகிறது. இதற்கு வஞ்சிததோஷம் எனப்பெயர். உடன் பிறந்த சகோதரிகளை வணங்கி அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும். சகோதரிகள் இல்லாதவர்கள் ஏழைப் பெண்களுக்குத் தானம் அளிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் வஞ்சித தோஷம் விலகிவிடும்.

### பந்த தோஷம்:

நம்மை நம்பி பழகியவர்களுக்குத் துரோகம் செய்வது அல்லது பழிவாங்குதல் பந்த தோஷமாகும். இந்த தோஷத்துக்கு தந்தை, தாய் வழிகளில் உள்ள மாமா, அத்தை, சித்தப்பா, பெரியப்பா ஆகியோருடைய பெண்களுக்குத் தான தர்மங்கள் செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் பந்த தோஷம் விலகும்.

### கல்பித தோஷம்:

பிறர் தன்னை விரும்புவதாக எண்ணிக் கொண்டு முறை தவறிப் பழகுதல் கல்பித தோஷமாகும். இத்தகைய தோஷம் ஏற்பட்டால் தன்னை விட வயதில் மூத்த பெண்களுக்குத் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் கல்பித தோஷம் உடனடியாக விலகி விடும்.

### வந்தூலக தோஷம்:

ஒருவர் தன்னைவிட வயது அதிகமுள்ள பெண்ணை திருமணம் செய்தால், அவருக்கு சுவாசக் கோளாறுகள், நரம்பு சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படலாம். இவ்வாறு உருவாகும் தோஷத்திற்கு வந்தூலக தோஷம் எனப்படும். வந்தூலக தோஷம் நீங்க வேண்டுமானால் வயதான தம்பதிகளுக்குத் தான தர்மங்கள் செய்ய வேண்டும்.

### ப்ரணகால தோஷம்:

திருமணப் பொருத்தங்கள் பார்க்காமல், பணம், புகழ், அந்தஸ்து,

www.facebook.com/ebooksintamil

பதவி ஆகியவற்றுக்கு ஆசைப்பட்டு ஒருவர், திருமணம் செய்து கொண்டால், அவருக்கு ப்ரணகால தோஷம் ஏற்படும். இதனால் வாழ்க்கையில் பிடித்தம் இல்லாத நிலை காணப்படும். இந்த தோஷத்தை தவிர்க்க வேண்டுமானால் அனாதை விடுதியியில் உள்ள பெண்களுக்குத் தான தர்மங்கள் செய்ய வேண்டும்

## 4.பிரம்மக்கத்தி தோஷம்

"பிரம்மஹத்தி தோஷம் என்பது, கொடுமையான பாவங்களைச் செய்வதால் ஏற்படுவதாக சாஸ்திரங்கள் சொல்கின்றன. தாய்க்கு உணவளிக்காமல் விரட்டி அடிப்பது, பசுவைக் கொல்வது, குருவை உதாசீனப்படுத்துவது, உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்வது, தெய்வச் சொத்தைத் திருடுவது போன்றவற்றால் இந்த தோஷம் ஏற்படும். குறிப்பாக நன்றி மறப்பதால்தான் இந்த தோஷம் ஏற்படுகிறது.

இந்த தோஷம் இருந்தால், ஜாதகர் தனது பிறவியில் என்ன உழைத்தாலும் அதற்கு உரிய பலன் கிடைக்காமல், வறுமையும் தோல்விகளையுமே சந்தித்து வாழ்வார். வேலை கிடைக்காது, வேலை கிடைத்தாலும் உரிய கூலி கிடைக்காது. கூலி கிடைத்தாலும் முறையான அங்கீகாரம் கிடைக்காது. இந்த நிலை ஓர் ஆண்டு இரண்டு ஆண்டுகள் அல்ல. பல ஆண்டுகள் நீடிக்கும். தொழிலில் உரிய அங்கீகாரம் கிடைக்காது. சமூகத்தில் திறமை இருந்தும் நல்ல நிலையை அடைய முடியாமல் தடுமாறிய வண்ணம் இருப்பார்கள். ஏன் சிலவேளைகளில் அவர்களது குடும்பத்திலே கூட அவர்களுக்கு மரியாதை இருக்காது. இதற்கு அவர்கள் பெரிய அளவில் செலவில்லாத முறையான எளிய பரிகாரங்களைச் செய்தாலே போதும். நல்ல பலன்கள் கிடைத்து மேன்மை அடைவார்கள்.

ஹத்தி தோஷங்கள் பற்றிய விளக்கங்களை, பற்பல தீர்வு முறைகளை அத்திக்காய் சித்தர் அளித்ததோடு, இவற்றை நடைமுறை வாழ்க்கையில் கடைபிடிக்கவுமான எளிய வழிகளையும் நல்கினார். குறிப்பாக, தாய், தந்தையர்க்கு ஆற்றும் சேவை, பலவிதமான தோஷங்களைத் தீர்க்க வல்லதாம்.

ஹத்தி தோஷங்கள் வினைச் சுமையை மென்மேலும் அதிகரிப்பதால், வாழ்க்கையில் இவை குறித்த காலத்திற்குள் நிவர்த்தி ஆகாவிடில், வாழ்வில் எத்தனை வசதிகள் இருந்தாலும், நிம்மதி இல்லாத

www.facebook.com/ebooksintamil

சூழ்நிலை வருத்தி வாட்டும்.

பிரம்மஹத்தி தோஷத்திலும் கூட - பகல் நேர ஹத்தி தோஷம், இரவு நேர ஹத்தி தோஷம் - என்ற காலவகை நுட்பம் உண்டு

எனவே, பிரம்ம ஹத்தி தோஷம் மட்டுமன்றி எத்தகைய தோஷம் உள்ளவர்களும் - பகல் நேரத்தில் தீர்த்த நீராடல், வேள்வி, பூஜை, ஆலய தரிசனம், தான தர்மம் போன்றவற்றையும் இரவு நேர வழிபாடாய், ராத்ரீ சூக்தம் ஓதுதல், வைச்வதேவம் எனும் வேள்வி, திருவாசகத்தின் குழைத்த பத்து, தேவாரத்தில் காரைக்கால் அம்மையாரின் மூத்த கோயில் திருப் பதிகங்களை ஓதுதல், மார்கழியில் பெருமாள் தலங்களில் நிகழும் பகல் பத்து, ராத்திரி பத்து வழிபாடு, பல காலமாய் சிவாலயங்களில் நின்று போயுள்ள மாதாந்திர மாத சிவராத்திரி வழிபாட்டு மீண்டும் புனரமைத்தல், அருணாசலத்தில் மாதசிவராத்திரி நாள் கிரிவலம், ஆலயங்களில் இரவு நேர அர்த்தஜாம வழிபாடு, இரவு கால பைரவ பூஜை, பள்ளியறைப் பூஜை, சீர்காழி ஸ்ரீபிரம்மபுரீஸ்வரர் கோயிலில் பிரதி வெள்ளி தோறும் நள்ளிரவில் நடைபெறும் (கோயில் விமானத்தில் உள்ள) சட்டநாதருக்கான புனுகுக் காப்பு ஆராதனை போன்றவற்றையும்,

விடியற்காலையில், பிரம்ம முகூர்த்த (காலை 3 மணி) வேளையில் கோ பூஜை, கணபதி ஹோமம் போன்றவற்றையும் - முறையாய் ஆற்றி வர வேண்டும்

## சர்ப்ப தோஷம்

ஜோதிடவியலின்படி எந்த ஒரு குடும்பம் சர்ப்பங்கள் சஞ்சரிக்கும் பகுதியில் அவற்றை விரட்டி ,அங்குள்ள பாம்பு புற்றுகளை இடித்து குடிபோகிறார்களோ அவர்களின் வாரிசுகளுக்கு சர்ப்ப தோஷம் ஏற்படும்.

இதில் ஒரு பெரிய தர்க்கம் இருக்கிறது. ஊரோடு ஒத்து வாழாது விலகிப்போக வேண்டிய அவசியம் அந்த குடும்பத்துக்கு ஏன் வந்தது ? ஒன்று அவர்கள் ஊருடன் மோதி தோற்று விலகியிருக்க வேண்டும். அல்லது அளவுக்கு மீறி ஊர்வாயை அடித்து விலகிச்சென்று பண்ணை வீடு டைப்பில் கட்டிக்கொண்டு போயிருக்க வேண்டும் அல்லவா ?இன்றைய மனோதத்துவ

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil

சாஸ்திரம் என்ன கூறுகிறது ? ப்ரோக்கன் ஃபேமிலியில் பிறக்கும் குழந்தைகள் மனச்சிக்கல்களுக்கு ஆளாகின்றன. மனச்சிக்கல் உடலையும் பாதிப்பது சகஜமே !

அக்காலத்தில் அ இன்றும் கிராமப்புறங்களில் வசிப்பவர்களில் சர்ப்ப தோசம் இருப்பவர்கள் பாம்புக்கடிக்கு ஆளாகலாம். ஆனால் இதரர்கள் விசயத்தில் இந்த தோசம் பல வகைகளில் வேலை செய்கிறது.

தர்கரீதியில்,விஞ்ஞான கண்ணோட்டத்துடன் யோசிக்கும் ஒரு தொழில் முறை ஜோதிடன் என்ற வகையில் இன்று சர்ப்பதோஷம் குறித்த கருத்துக்களை பதிவு செய்கிறேன்.

ஜோதிடப்படி லக்னத்திலிருந்து ராகு,கேதுக்கள் 3,4,6,10,11,12 தவிர வேறெந்த பாவத்திலிருந்தாலும் அது சர்ப்பதோஷம். ஜாதகத்தில் இந்த தோஷம் இருந்தால் இதே போல் தோஷம் உள்ளவரையே மணக்க வேண்டும் இல்லாவிட்டால் மரணம் ஏற்படும் என்றும் ஜோதிடர்கள் அறுதியிட்டு கூறுகிறார்கள்.
காளாஸ்திரி சர்ப்பதோஷ பரிகாரம்:

காளாஸ்திரியில் சர்ப்பதோஷ பரிகாரம் செய்து கொண்ட உடனே தோஷத்தை காக்காய் எடுத்துக் கொண்டு போய்விடும் என்று கதை விடுகிறார்கள். மக்களும் அதை நம்பி "இந்த ஜாதகத்துல சர்ப்ப தோஷம் இருக்குங்க " என்று ஆரம்பித்த நொடியிலேயே " ஆங்.. அதெல்லாம் ஒன்னுமில்ல சாமி! காளாஸ்திரியில பரிகாரம் செய்தாச்சு" என்று கூறுகிறார்கள்.

தோஷம் போகவே போகாது:

அம்மா கேமிரா மாதிரி, குழந்தை பிலிம் மாதிரி ஷட்டர் ஓப்பனாகி எதிரில் உள்ள காட்சி பதிவாகிவிட்டால் பிறகு அதை மாற்றவே முடியாது. கிரக நிலை கூட அவ்வளவுதான்.பச்சை மண்ணான குழந்தை சகல பாதுகாப்புகளுடன் தானிருந்த கருப்பையை விட்டு வெளிவந்ததுமே கிரகங்கள் தமது முத்திரையை ஆழ பதித்து விடுகின்றன. ஒரு ஜாதகத்தில் சர்ப்ப தோஷம் இருந்தால் அது அந்த ஜாதகரை என்ன செய்யுமோ (இது இந்த பார்ப்பன வியாபாரிகளுக்கு தெரியவே தெரியாது) அதை செய்தே தீரும். காளாஸ்திரி போனாலும் இதே நிலைதான். காலிஃபோர்னியா போய் செய்தாலும் இதே நிலை தான்.

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil

பின்னே சர்ப்பதோஷம் என்ற பெயர் எதற்கு:

சர்ப்பம் யோகத்துக்கும் அறிகுறி:

ஆம். பாம்பு யோகத்துக்கும் அறிகுறியாக உள்ளது. குண்டலிசக்தி கூடஒரு பாம்பு வடிவத்தில் உறக்க நிலையில் இருப்பதாய் யோக நூல்கள் கூறுகின்றன. யோகத்தின் மீதான ஆவல்,முயற்சி நல்லதே. இதற்கும் ராகு கேதுக்கள் நல்ல நிலையில் இருக்கவேண்டும். ராகு கேதுக்கள் ஒருவருக்கொருவர் 7 ஆவது ராசியில் இருப்பார்கள். டிகிரியில் சொன்னால் 180 டிகிரி. எனவே இருவரும் நல்ல இடத்தில் அமைவது அரிதே ! அதனால் தான் உலக சுகங்களை(இதற்கு காரகன் ராகு) பெறுபவர்கள் யோகத்தில்(இதற்கு காரகன் கேது) நாட்டம் காட்டுவதில்லை. உலக சுகத்தில் ஈடுபாடு காட்டும்போது யோகம் ஈர்ப்பதில்லை. யோகத்தில் ஈடுபாடு ஏற்படும்போது உலக சுகம் ஈர்ப்பதில்லை. எனவேதான் உலக வாழ்வில் வெற்றி பெற்றவர்கள் கூட போலி சன்னியாசிகளிடம் ஏமாந்து விடுகிறார்கள். உண்மையான சன்யாசிகள் கூட திடீர் என்று உலக சுகங்களை அனுபவிக்க துடிக்கின்றனர்.

வாழ் நாளில் ஆரம்பத்தில் ராகு திசை நடந்து (படிக்கும் காலத்தில் அல்ல) உலக சுகங்களையெல்லாம் அடைந்துவிட்டால், பிறகு வரும் கேது தசையில் ஞானம் பெறலாம்.

இது தலைகீழாக அமையும் போது ஆரம்பத்தில் சன்னியாசம் , பின் உலக சுகங்களில் ஈடுபாடு என்ற நிலை ஏற்பட்டு விடும். உ.ம் பித்துக்குளி முருகதாஸ்.

கேது நல்ல இடத்தில் இல்லாவிட்டால் இதர கிரகங்களின் உதவியால் விழிப்பு நிலைக்கேகிய குண்டலியின் தாக்கத்தை தாங்க முடியாது பித்தாவதோ, அல்லது வெறுமனே கஞ்சா குடிக்கும் சன்யாசியாவதோ நிகழ்ந்துவிடும். இதுவும் சர்ப்பதோஷத்தின் விளைவே.

சர்ப்பம் செக்ஸுக்கு அறிகுறி:

சர்ப்பம் செக்ஸுக்கும் அறிகுறியாக உள்ளது. சர்ப்ப தோஷ ஜாதகர்கள் செக்ஸில் மித மிஞ்சிய ஈடுபாடு கொண்டவர்களாக இருக்க வாய்ப்புண்டு. ரகசிய உறவுகள்,கள்ளக்காதல்களுக்கும் சித்தமாகிவிடுவார்கள். ஆனால் இவர்கள் நிலை இருபுறம்

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil

எரியூட்டப்பட்ட மெழுகு வர்த்தி போன்றது. சீக்கிரமே அதில் ஆர்வமிழந்து இழந்த சக்தி வைத்தியர்கள் பின்னால் திரிய வேண்டி வரும்.

பாம்புக்குரிய குணநலன்கள் :
பாம்புக்கு மனிதர்கள் மீது பயம். மனிதர்களுக்கு பாம்பு மீது பயம். எனவே பாம்பு மறைந்து வாழ்கிறது. மனிதன் கண்ணில் பட்டால் அடிப்பட்டு சாகிறது. அல்லது மனிதனை கொத்தி கொன்று விடுகிறது. வளைந்து வளைந்து செல்கிறது. இரையெடுத்த பின் அசையாமல் கிடக்கிறது. பாம்புக்கு சிறுநீர்,மலம் கழிக்க விந்துவை வெளியேற்ற தனித் தனி துவாரங்கள் கிடையாது. அனைத்துக்கும் பொதுவாக க்ளோயகா என்ற துவாரம் தான் உண்டு.

சர்ப்ப தோஷம் கொண்டவர் நிலை:
ஜாதகத்தில் சர்ப்ப தோஷம் கொண்டவர் நிலையும் ஏறக்குறைய இப்படித்தான். இவர்களும் குடும்பத்தினரிடம் கூட மனம் திறந்து பேசமாட்டார்கள். அவ்வப்போது அன் வாரண்டெட் மோஷன்ஸ் இருக்கும், வாமிட்டிங் சென்ஸேஷன் இருக்கும். சிறு நீரில் விந்து வெளியேறலாம். உண்ட பின் உட்கார கூட முடியாது. தமக்கு தீங்கு செய்தவர்கள் சதிகள் செய்து ஒழித்துக்கட்ட முயல்வார்கள். இந்த சதி எதிராளிக்கு தெரிந்து விட்டால் அடித்தே கொன்று விடுவான்.

பாம்பு விஷத்துக்கான குறியீடு மட்டுமே. பாம்பு யோகத்தும்,யோக சக்தியான குண்டலிக்கும்,செக்ஸுக்கும் கூட குறியீடாக உள்ளது. மனித உடலில் எத்தனையோ விதமான விஷங்கள் கலக்கின்றன. (கூல்ட்ரிங்ஸில் பூச்சி மருந்து,ஏர்கூலரிலிருந்து மீத்தேன்,காய்கறிகள் மீது தெளிக்கப்பட்ட புச்சிமருந்து,வேர்கள் மூலம் உறிஞ்சப்பட்ட யூரியா இப்படி அநேகம்.)

இவற்றை உடலில் வைத்துக்கொண்டும் உயிர்வாழும் சக்தியோ,அல்லது இவற்றை முறிக்கும் சக்தியோ மனித உடலுக்கு இருந்தாலன்றி மனிதன் தொடர்ந்து உயிர்வாழமுடியாது என்பது உண்மை தானே. இந்த விஷத்தை முறிக்கும்,சமாளிக்கும் சக்தி சர்ப்பதோஷ ஜாதகர்களின் உடலில் குறைவாக இருக்கும்இதுதான் அசலான சங்கதி.

சர்ப்பத்தின் குணம் சர்ப்ப தோஷம் உள்ளவர்களுக்கு

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil

ஏற்பட்டுவிடுகிறது. அனைவர் மீதும் சந்தேகம், உதவாத விஷயங்களை கூட ரகசியமாக செய்வது,உண்டவுடன் சுருண்டு படுத்துக்கொள்வது, நேரிடை வழி,சிந்தனைகளை விடுத்து குறுக்கு சால் ஓட்டுவது,உடலுறவில் மிகுந்த ஈடுபாடு காட்டுவது,வலிப்பு தொடர்பான நோய்கள்,நரம்பு கோளாறுகள்,இனம் புரியாத வலி ஏற்பட்டு பாம்பை போல் நெளிவது, மெடிக்கல் ரியாக்ஷனுக்கு இலக்காவது,(ஆங்கில மருந்துகள் யாவுமே ட்ரட் எனப்படும் விசங்களே.அவை அமுதம் என்று நினைப்பது தவறு, மாறுபட்ட விளைவை ஏற்படுத்தும் அவ்வளவே. வயிற்றுப்போக்கு இருக்கும்போது மலத்தை கட்டச்செய்வது போன்று). நடக்கும்போது கூட சாலையில் வளைந்து வளைந்து நடப்பது போன்ற விளைவுகளும் ஏற்படுகின்றன,

மேலும் அலர்ஜி (சாதரண பொருட்களை விஷமாக எண்ணி உடல் எதிர்ப்பது) .மறைத்து பேசுவது,கிசுகிசுப்பது,வாய் திக்குவது,விசம் உண்டு தற்கொலைக்கு முயல்வது,உடலில் ஆச்சரிய குறி போன்று மச்சம் தோன்றுவது, ஜாதகர் கழற்றி வைத்த உடை மீது (முக்கியமாய் சர்ப்ப தோஷ பெண்கள் அணிந்த விலக்கான உடைமீது)பாம்பு ஊர்ந்து செல்வது, அடிக்கடி அபார்ஷன்,கனவில் சர்ப்பங்கள் தொடர்ந்து வருவது,பூச்சி,பொட்டு,தேள் கடிக்கு இலக்காவது, தோஷம் உள்ளவர் ,இல்லாதவரை மணந்தால் தோஷம் இல்லாதவரின் உடல் வலிமை,முகக்களை,கவர்ச்சி யாவும் ஒன்னரை வருடங்களில் பாதியாகிவிடுவதை காணமுடிகிறது. ராகு,கேதுக்கள் நிழல் கிரகங்கள் என்பதால் ப்ளாக் ஹோல் போன்றும் செயல்படுகின்றன.(சக்தியை உறிஞ்சுதல்)

உடலமைப்பிலும் வித்யாசம் இருக்கிறது. ஒன்று ஊளைச்சதை,அல்லது வயதுக்கேற்ற வளர்ச்சி இன்மை காணப்படுகிறது. சதிகள் செய்வது,சதிக்கு இலக்காவது,ரகசிய எதிரிகள்,இரவில்,இருளில் செய்யும் வேலைகளில் ஈடுபாடு. (சினிமா,போட்டோகிரஃபி)சட்ட விரோத செயல்கள்,கடத்தல்,டூப்ளிகேட் தயாரித்தல்,கள்ள கையெழுத்து,சூதாட்டம் ,ஸ்பெகுலேஷனில் ஈடுபாடும் தோன்றுகிறது

சர்ப்ப தோஷ வகைகள்

முதல் வகை அனந்த கால சர்ப்ப தோஷம். ராகு முதல் வீட்டிலும் கேது

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil

ஏழாம் வீட்டிலும் இருப்பர். மற்ற கிரகங்கள் இவர்களுக்கு இடையில் அமைந்திருக்கும். அதாவது முதலாவதும் கடைசியுமாக ராகு கேது இருந்தால் அதற்கு பெயர் அனந்த கால சர்ப்ப தோஷம்.

இந்த தோஷம் இருப்பவர்களுக்கு இளமை காலம் மிகவும் சிரமமானதாகவும், கடினமானதாகவும் இருக்கும். சிலருக்கு திருமணத்தடை இருக்கும். அதன் பிறகான வாழ்க்கை அமைதியாய் அமைந்திடும்.

இரண்டாம் வீட்டில் ராகு மற்றும் கேது எட்டாம் வீட்டில் இருந்தால் அதற்கு குளிகை கால சர்ப்ப தோஷம் . இவர்களுக்கு பூர்வீக சொத்து நிலைக்காது,தொடர்ந்து உடல் நிலையில் எதாவது பிரச்சனைகள் வந்து கொண்டேயிருக்கும். 32வயதுக்கு மேல் நன்மைகள் உண்டு.

பொருளாதரப் பின்னடைவு ஏற்படக்கூடும்.

ராகு மூன்றாம் வீட்டிலும் கேது ஒன்பதாம் வீட்டிலும் இருப்பதை வாசுகி கால சர்ப்பதோஷம் என்கிறார்கள். இது மனபலத்தை கெடுக்ககூடியது. அதனால் இவர்களால் எந்த வேலையையும் துணிந்து செய்ய முன் வர மாட்டார்கள். இவர்கள் பார்க்கிற வேலை மற்றும் தொழிலில் ஏதாவது பிரச்சனை வந்து கொண்டேயிருக்கும். சகோதரர்களுக்கிடையில் விரோதப் போக்கு ஏற்படும்.

சங்கல்ப கால சர்ப்ப தோஷம் என்றால் நான்காம் வீட்டில் ராகுவும் பத்தாம் வீட்டில் கேதுவுமிருக்க வேண்டும். இவர்களுக்கு வாசுகி கால சர்ப்ப தோஷ தாக்கத்துடன் கூடுதலாக மன அழுத்தம் ஏற்படக்கூடும்.திருமணத்திற்குவெளியே ஏற்படுகிற உறவுமுறையினால் பல்வேறு சங்கடங்களை சந்திக்க நேரிடும். பெற்றோரின் உடல் நிலையில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

ஐந்தாம் வீட்டில் ராகு மற்றும் பதினோராம் வீட்டில் கேது இருப்பவர்களுக்கு பத்ம கால சர்ப்ப தோஷம் இருக்கும். இது தான் சற்று மோசமான தோஷமாக பார்க்கப்படுகிறது. ஏனென்றால் இது புத்திர தோஷத்தை கொடுக்கக்கூடியது. குழந்தை கிடைப்பதில் சிக்கல்கள் ஏற்படுக்கூடும் இதனால் கணவன் மனைவிக்கு இடையே உறவில் விரிசல் விழும் .

48வயதுக்கு பிறகு இவர்களுக்கு நல்ல மாற்றங்கள் தெரியும்.

www.facebook.com/ebooksintamil

www.facebook.com/ebooksintamil

மஹா பதம கால சர்ப்ப தோஷம் இருப்பவர்களுக்கு ஆறாம் வீட்டில் ராகுவும் பன்னிரெண்டாம் வீட்டில் கேதுவும் இருப்பார்கள். இது இளமைக்காலத்தை விட பிற்காலத்தில்தான்சிறந்தபலனை அளிகக்கூடியது. அதிகார பதவி, புகழ், அந்தஸ்த்து ஆகியவற்றை கிடைக்கச் செய்திடும்.

புகழின் உச்சியில் ஏற்றிவிடும் அதே சமயம் நம்மை அதளாபாதாளத்திற்கும் கொண்டு செல்லக்கூடியது இது. இவர்களுக்கு தொடர்பு இருக்கும்



சரி வாசகர்களே மானுடத்தை பாதிக்கும் அணைத்து தோஷங்களையும் அதை போக்கும் வழி முறைகளையும் தெரிந்து கொண்டோம். நாம் பலன் அடைந்தது போல் பிறரும் பயன் அடைகிற மாதிரி இதை பகிர்ந்துகொள்வீர் என நம்புகிறேன் நன்றி !!....வணக்கம்

A.kannan.

������������������������������

www.facebook.com/ebooksintamil